192


# தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 5 | சென்னை | 11-10-58 | சனிக்கிழமை | இதழ் 17


198338
13 OCT 1958

# செங்கோலுக்கேன் சினம்?

'செங்கோல்' 28-9-58 இதழில் எழுதியுள்ள 'தமிழன்' என்பார் திரு. ம. பொ. சி. அவர்களே ஆனதால், இங்கே ம. பொ. சி. அவர்களுக்கே நேரடியாகப் பதில் சொல்லப்படுகிறது.

இரண்டு கிழமைகளுக்குமுன், எட்டயபுரத்தில் நடைபெற்ற பாரதி விழாவைப் பற்றி, யான் எழுதிய ஒரு தலையங்கத்துக்கு திரு. ம. பொ. சி. அவர்கள், தமது 'செங்கோ'லில் பதில் கொடுத்துள்ளார்கள். யான் எழுதியதை இன்னும் தெளிவாக்கவும், உறுதிப்படுத்தவும் இந்தப் பதிலைப் படைக்கிறேன்.

திரு. ம. பொ. சி. அவர்கள் முதற்கண் கூறுவதுபோல், 'தி. மு. க. வட்டாரம்' இந்த ஆண்டு மட்டும் தன் 'பாரதி பக்தி'யை வெளியிட்டுக் கொள்ளவில்லை. ஏறக்குறைய ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே, அறிஞர் அண்ணா அவர்கள் பாரதியைப் பற்றிய தனது கருத்தை அழகாகத் தெளிவாகத் தந்துள்ளார்கள். அதற்கு முன்பும் அவர்கள் பாரதியை வெறுக்கவில்லை. அண்ணா அவர்களின் தலைமையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகமும், பாரதியை விரும்பியே போற்றி வந்தது; வருகிறது. திராவிட சமுதாயத்துக்கு புதிய விழிப்பை முதன் முதலில் தந்தவன் பாரதியே என்கின்ற கருத்தை ஆரம்ப காலத்திலிருந்தே யானும் வலியுறுத்தி வருகின்றேன். 'தென்ற'லின் பாரதி மலரை, யான் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் விரும்பிப் படித்தார்கள். இந்த ஆண்டு மட்டும் அவர்களுக்கு பாரதியிடம் 'பக்தி' பிறந்ததாகக் கூறுவது, ம. பொ. சி. அவர்களின் கருத்திலுள்ள முதற் குற்றம்.

அடுத்து, 'கடமை தவறிய அந்தணர்களை பாரதி கடிந்து கொண்டாரே அந்த வரிகளைப் பிய்த்தெடுத்து, பாரதியும் பார்ப்பனர் விரோதி என்று பிரச்சாரம் செய்திருக்கின்றன தி. மு. க. ஏடுகள்' என்கிறார் 'செங்கோல்' ஆசிரியர். கடமை தவறிய அந்தணர்களைத்தானா பாரதி கடிந்து கொண்டான்? 'பேராசைக்காரனடா பார்ப்பான்' என்றானே தவிர, 'பேராசைக்காரனடா கடமை தவறிய பார்ப்பான்' என்று பாரதி சொன்னான்? இந்தப் பாடல் முழுவதும், பொதுவான பார்ப்பன சமூகத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதல்தான் என்பதை, ம. பொ. சி. அவர்கள் உணர்வது நலம். இப்படி நான் சொல்வது, அவனைப் பார்ப்பன விரோதியாகக் காட்டிப் பெருமைப்படுவதற்காக அல்ல. அதில் எனக்கு ஆசையும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் துவக்க காலத்திலிருந்தே தன்னை 'பார்ப்பன விரோதி அல்ல' என்று தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. 'பார்ப்பனீயம்' என்ற கொள்கையையே சாடி வந்திருக்கிறது. ம. பொ. சி. அவர்களின் கருத்துப்பாட்டில் உள்ளபடி, கடமை தவறிய அந்தணர்களை மட்டுமே அவன் சாடவில்லை என்பதைத்தான் நான் குறிப்பிட வருகிறேன்.

அடுத்து, 'பாரதி விழாவில் கலந்துகொண்ட பெரும்பாலோரின் கொள்கை, நம்மீது பொறாமை கொண்டதுதான்,' என யான் குறிப்பிட்டிருப்பதுபற்றி ம. பொ. சி. அவர்கள், சில ஐயவினாக்களை எழுப்பியுள்ளார்கள். இந்த வரிகளில் உள்ள 'பெரும்பாலோர்' என்ற வார்த்தைக்குள் யார் யார் அடங்குகிறார்கள் என யான் விளக்கம் தரவில்லை. அப்படித் தருவது அரசியல் நாகரிகமும் ஆகாது. ஆனால், என்னதான் ம. பொ. சி. அவர்கள் மறைக்க முயன்றாலும், இந்தப் பொறாமை உணர்ச்சிதான் இந்த ஆண்டு பாரதி விழாவுக்கு பல வாற்றானும் தூண்டுதலாக இருந்தது என்பதை யான் மாற்றிக் கொள்ள இயலவில்லை. எப்படி, எந்த வகையில் என்று கிளரப் போவது, வெறும் பகைமையை வளர்ப்பதற்கே பயன்படும் என்பதால் இதற்குமேல் பதில்சொல்வதற்கில்லை. ம. பொ. சி. அவர்களின் உள்ளுணர்ச்சியே இதை நன்றாகப் புரிந்து கொள்ளும். இதே நடிகர்கள் சென்ற ஆண்டிலும், அதற்கு முன்பும் சென்னையிலேயே இருந்திருக்கிறார்கள். அப்போது இவர்களுக்கில்லாத 'பாரதி பக்தி' இப்போது அவர்களுக்கு ஏற்பட்டதில் தவறில்லை. ஆனால் திடீரென்று இந்த மயக்கம் எப்படி வந்தது? இதற்கு 'செங்கோல்' ஆசிரியர் பல காரணங்களைக் காட்டலாம். ஆனால், நானும் பல நடிக நண்பர்களோடு பழகிக்கொண்டிருக்கிறேன் என்பதை அவர் மறந்துவிடக்கூடாது. அடிப்படையைத் தோண்டி, சுவைக் குறைவை ஏற்படுத்துமாறு ம. பொ. சி. அவர்கள் என்னைத் தூண்ட வேண்டாம்.

இந்த ஆண்டில்மட்டும் அதிகப்படியான கலைஞர்கள் பாரதி விழாவில் கலந்துகொண்டதற்கு, கலைஞர்களிடையே சிவாஜி-கணேசனுக்குள்ள எல்லையற்ற செல்வாக்குதான் காரணம் என்று, ம. பொ. சி. அவர்கள் சொல்வதை வாதத்திற்காக நான் ஒப்புக்கொள்கிறேன். இந்த செல்வாக்கு எப்படி, எந்த உருவத்தில் படலம் பிடித்தது என்பதை ஆராய முற்படுவது சுவையாக இருக்காது. நிற்க,

'நூறு நடிகர்களைக் காட்டித் திரட்டினார்கள்' என யான் குறிப்பிட்டிருந்தேன். விழாவுக்கு முந்திய விளம்பரங்களெல்லாம் கலைஞர்களைப்பற்றியதாகவே இருந்ததால், யான் இப்படிக் கருதினேன். விழாவில் கலந்துகொண்டவர்களுக்குள் சிறந்த பேச்சாளரான ம. பொ. சி. அவர்களுக்கே கூட, விளம்பரங்களில் முதலிடம் இல்லை என்பதை அவர் மறந்துவிடக்கூடாது. விழாவைப் பற்றிய விவரங்கள் அனைத்தும், கலைஞர்களைத் தலைவர்கள் அண்டி நின்ற தன்மையைத்தான் காட்டின. அதனால்தான், 'ஓகோ! நடிகர்களைக் காட்டி கூட்டம் திரட்டி, தலைவர்கள் பேசப் போகிறார்கள் போலிருக்கிறது!' என யான் கருதினேன். இது குறித்தே 'காட்டி' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினேன். எங்கள் கூட்டங்களை நாங்கள் நடிகர்களைக் காட்டியே திரட்டுகிறோம் என, அரசியல் பகைவர்கள் கூறி வந்ததும் இந்த வார்த்தை போடப்பட்டதற்கு ஒரு காரணமாகும். அடுத்த வரிகள் 'நாம் இரண்டு நடிகர்களைக் காட்டித் திரட்டும் அளவுதான்' என்று யான் குறிப்பிட்டிருப்பது, 'எதிரி'களின் வார்த்தைகளை எடுத்தாளும் முறையில்அமைந்ததாகும். வேண்டுமானால் மேலிரு கொக்கிகள், (இன்வர்ட்டட் கமாஸ்-'') போடாமல் எழுதியதை, ம. பொ. சி. அவர்கள் குறையாகச் சுட்டலாம். 'எண்ண'த்தின் ஆரம்பத்திலேயே 'நம்மைப்பற்றிச் சிலர் இப்படிச் சொன்னார்கள்' என்று யான் குறிப்பிட்டிருக்கிறேன்.

**கண்ணதாசன்**

இந்த விழாவை நடிகர்களே தான் நடத்தினார்கள் என்று கூற வருவது, தலைவர்களுக்கு இதிலுள்ள ஈடுபாட்டைக் குறைக்கிறது. இப்படிக் குறைத்துக் கொள்வது சில நிகழ்ச்சிகளிலிருந்து அவர்களை விடுவித்துக் கொள்வதற்குப் பயன்படலாம். ஆனால், பாரதியைப் பயின்றவர்கள் பாரதி விழா நடத்துவதைக் கைவிட்டுவிட்டார்கள் என்பதை இது காட்டும். தலைவர்களோடு சம அளவுக்கு நடிகர்கள் பங்கு கொண்டார்கள் என ம. பொ. சி. அவர்கள் கூறியிருந்தால் பெருமைக்குரியதாக இருந்திருக்கும். ஆனால், கலைஞர்களுக்குப் பெருமை தரவேண்டும் என்கிற

— 3-ம் பக்கம் —

# ஞானி நீட்ஷே

**இரா. இளஞ்சேரன்**

"**நா**ன் இறந்த பிறகு சரித்திரத்தில் கிருஸ்துவிற்கு முன்னும், கிருஸ்துவிற்கு பின்னும் என்ற காலக் குறியீட்டிற்கு பதிலாக நீட்ஷேக்கு முன்னரும், நீட்ஷேக்கு பின்னரும் என்றே வழங்கப்படும். பலவீனர்களின் தலைவனான ஏசு புறக்கணிக்கப்படுவான் !"

சென்ற நூற்றாண்டின் நிகரற்ற சிந்தனையாளனான நீட்ஷே இப்படி தன்னைத்தானே புகழ்ந்துகொண்டான். கடைசி பத்து வருடங்களைப் பைத்தியக்கார விடுதியிலே கழித்த இந்த ஜெர்மன் தத்துவ ஞானி எல்லை வகுத்து வைத்துப் போயிருக்கும், சில பல கொள்கைகள் இன்றும் அவிழ்க்கமுடியாத புதிர்களாகவே உள்ளன. இவனது லட்சியங்களை ஜீரணிக்க இருபதாம் நூற்றாண்டு அறிவியல்கூட திராணியற்று கிடக்கிறது !

காலத்தின் தேவையை-சமுதாயத்தின் ஒரு சாரினரின் வேட்கையை, கெட்டழிந்து போன யந்திர யுகத்தின் விரக்தி விசித்திரத்தை நீட்ஷேயின் எண்ணங்கள் பூரணத்துவங்களாக்கின.

'தெய்வம் என்றோ இறந்துவிட்டது ! மனிதா ! எழுந்திரு !' என்று குரல் கொடுத்த துணிச்சலான ஞானாசிரியன் நீட்ஷே, கொள்கையின் அடிப்படை வடிவங்களை இவன் டார்வின், பிஸ்மார்க் ஆகியோரின் கோட்பாடுகளிலிருந்து தொகுத்து எடுத்திருந்தான்.

'நீட்ஷே நாசிசத்தின் பிதா மகன்: விசித்திரமான அழிவு வாதி, மனித முன்னேற்றத்தின் பிறவி எதிரி.' என்றெல்லாம் மிகப் பலர் இவனைத் தூற்றும்போது, இன்னும் சிலர் இவனது அருமை பெருமைகளை வாழ்த்துகிறார்கள் !

'நீட்ஷேயைப்போல, ஒரு நிலையற்ற குழம்பிப்போன எழுத்தாளன் இதுவரை பேனாவைத் தொட்டதேயில்லை' என்கிறான் ஒரு விமர்சகன். இவன் எழுதிய 'அதி மனிதனை' வெறும் பைத்தியக்காரனின் கற்பனையாக ஹிஹேலியன் டுருஸ் குறிப்பிடுகிறார்.

'ஒளி மங்கிய லட்சியத்தை மனதிலே வைத்துக்கொண்டு போராடிய புதுமை விரும்பி,' 'புயலைப் போன்ற ஆவேசமான தத்துவாசிரியன்' என்றெல்லாம்கூட நீட்ஷே எனும் பெயருக்கு வரலாறுபொருள் தருகிறது.

சென்ற நூற்றாண்டின் மிகப் பெரிய ஞானியான **டால்ஸ்டாய்**, இவனைப்பற்றி எழுதுகிறான் :

> நீட்ஷே ஒரு உண்மையான பைத்தியம்- முதலில் அவனது நூற்களை படித்தபோது அந்த அலங்காரச் சொற் பிரயோகங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. எத்தனை வேகம் ! எத்தனை அழகு, அவைகளில் ! நான் என்னையே மறந்தேன் ! பிறகுதான் எனக்கு அவனது லட்சியங்கள் புரிந்தன. ஐயோ ! எத்துணை பயங்கரம் ! நீட்ஷே கிருத்துமதத்தை இழுத்தெறிந்து வதை செய்யும் கோரத்தை என்னவென்று சொல்வது ?"

நீட்ஷே-அந்த ஞானாசிரியன் சாமான்யனல்ல. மனித குல காவியத்திற்கே 'உரை' எழுதியவன்; கவிதையும், இசையும், புதுமையின் வேட்கையும் நிரம்பிய உள்ளம் அவன் உள்ளம். மனிதப் பண்பாடுகளின் வளர்ச்சிக்கு, நாகரிக செழுமையின் சரித்திரத்திற்கு அவன் அருமையான விமர்சனத்தை தயாரித்திருக்கிறான்.

வாழும் விழைவு மனிதனின் இயற்கைப் பண்பு. நன்மை, தீமை, விதி வகுத்த வழி, எல்லாமே இறைவன் செயல் போன்ற சொற்களும், நம்பிக்கைகளும் மக்களுக்கு போலித்தனமான ஆறுதலை தந்துகொண்டிருக்கின்றன. கடவுள் வெறும் கற்பனை என்ற தெளிவு பிறக்கும்போது பாவம், புண்ணியம், இவைகளின் மேல் பூசி மெழுகப்பட்ட மெருகுக் கோலங்கள் கலைந்துவிடுகின்றன. மனித குலத்தின் தீராத பகைவனான கடவுளுக்குக் கிடைத்திருக்கும்வலிமை கூட, மனிதனே கற்பனை செய்துகொண்டதே தவிர உண்மையல்ல.

ஆதி நாளில் வல்லான் வகுத்த அத்தனையும் புனித நெறிகளாகப் போற்றி பாதுகாக்கப்பட்டன. வலிமை மிக்கவன் சட்டங்களைப் படைத்து, பிறரை ஆட்டிப் படைத்தான். அடக்கப்பட்ட அந்த திராணியற்றவர்களின் கூட்டு உணர்வாக புரோகிதம் பிறந்தது. முதல் புரோகிதன் எப்படியோ புத்திசாலித்தனமாக, கடவுளை சிருஷ்டித்தான் !

வல்லவனுக்கு வல்லவனாகிய ஒரு சக்தியை ஏற்படுத்தி இல்லாத சிறப்புகளை அதன்மேல் ஏற்றி வைத்து வலிமையுள்ளவனை பயமுறுத்தியதால் புரோகிதனின் பிழைப்பும் நடந்தது !

மனிதர்கள் 'கடவுள் எனும் அர்த்தமற்ற கற்பனையின் அடிமைகளாக வாழ்கிறார்கள். அந்த கடவுளர்களை வைத்துக்கொண்டு புரோகிதர்கள் பொம்மலாட்டம்' காட்டுகிறார்கள் ! வீராதி வீரர்களை வீழ்த்திய புரோகிதனின் ஆதிக்கம், அதாவது கோழைகளின் அரசு எங்கும் விரிந்தது. இங்கேதான் மனித குலத்தின் சரிவு துவங்குகிறது...

கழிந்த பல நூற்றாண்டுகளாக இந்த பரிதாபம் நடைமுறையாகிவிட்டது. இதனை ஒழித்திட வேறு வழியே இல்லையா, என்ன ?

இருக்கிறது. நீட்ஷேயே சொல்கிறான் அதனையும்.

கோழைத்தனமாக புரோகித ஆதிக்கத்தை விரட்டிவிட்டு வலிமையின் உயிர்ப்பை அரசு கட்டிலில் அமர்த்த வேண்டும். இன்றைய உலகில் திராணிமிக்கவர்கள் ஜெர்மனியர்களே ! **பிஸ்மார்க்** அவர்களின் நிகரற்ற தலைவன். உலகை ரட்சிக்க வேண்டிய பெரும் சுமை அவருக்கே ஏற்பட்டிருக்கிறது.

எனவே, கொடுத்து வைத்த மனித ஜென்மங்களே ! எல்லோரும்—முற்போக்கை விரும்பும் எல்லோரும் பிஸ்மார்க்கின் பாதச்சுவடுகளை பின்பற்றுவீர்களாக !

......இப்படிப் பேசுகிறது நீட்ஷேயின் தத்துவ வரலாறு. **டார்வின்** கண்டுபிடிப்பைக்கூட திருத்தி எழுதுமளவிற்கு நீட்ஷே துணிச்சல் பெற்றிருந்தான் !

> "மனிதன் பரிணாமத்தின் இடைநிலையே தவிர, அதன் எல்லையல்ல-அமீபா பூச்சியிலிருந்து வளரும் பரிணாம இயக்கம், இன்றைய மனிதனோடு நின்றுவிடுவதல்ல. பரிணாமம் இயற்கையின் தீராத செயல் முறை. மனிதன் இன்னும் எப்படியெல்லாமோ வளரப் போகிறான் !

இந்த வளர்ச்சியைத் தேக்கி நிறுத்தாமலிருப்பதே மனிதனின் லட்சியம். இயற்கை நியதிகளிலிருந்து மனிதன் விலக, விலக, 'பரிணாம வளர்ச்சி' தடைப்பட்டு விடுகிறது.

இயற்கையிலிருந்து மனிதனைப் பிரித்து வைப்பவை, எவையெல்லாம் என்பதற்கு நீட்ஷே திடுக்கிடும் பதிலையே அளிக்கிறான்; பண்பாடு, நாகரிகம், சமூக நல்லுறவு, ஜனநாயகம் போன்ற புது உலகின் தேவைகள் அனைத்தையும் நீட்ஷே வெறுப்புக் குமுற சபித்திருக்கிறான் ! பரிணாம வளர்ச்சியின் வருங்கால நிலையை அவன் 'அதி மனிதன்' என்று அழைத்தான். பரிணாமத்தோடு ஒத்துழைத்தால், இயற்கையிலிருந்து விலகாமலிருந்தால், அதி மனித இனம் விரைவிலேயே உருப்பெற்றுவிடும். இதற்கான உபதேசங்களால் நீட்ஷே தனது எண்ணற்ற ஏடுகளை நிறைத்திருக்கிறான்.

மதம், தத்துவம், பௌதிகம், நீதி, சன்மார்க்கம் போன்ற பல துறைகளை நீட்ஷேயின் கவிதை வேகமும், கலை ஆர்வமும் புதுக் கோலம் செய்வித்தன.

'அழகிய உலகே ! நீ எங்கே மறைந்தாய் ? இயற்கையின் நல்ல இளமையே, திரும்பவும் வந்துவிடு !" என்ற மகா கவிஞன் ஷில்லரைப்போல, நீட்ஷேயும் பிரலாபித்தான். கவிஞர்களை வெறுக்கும் கவிஞனாக அவன் வாழ்ந்தான்.

கவிஞர்கள் எல்லோரும் குட்டையைக் குழப்புகிறார்கள். சிலருக்கு மாணிக்கங்கள் கிடைக்கலாம், ஆனால் பெரும்பான்மையான புலவர்களின் தூண்டிலிலே மறந்து போன பழைய தெய்வங்களின் தலைதான் சிக்குகிறது. கவிஞன் பொருளற்ற சூன்யத்தின் சாகரம் ! நீட்ஷேயின் 'அதி மனிதன்' கவிஞர்களைப்பற்றி இப்படி விமர்சனம் செய்கிறான்.

'நெஞ்சிலே நெருப்போடுவாழ்ந்த வேதாந்தி' என்று வரலாறு நீட்ஷேயை சுட்டுக் காட்டுகிறது. அந்த நெருப்பிலேதான் பிற்காலத்திலே பல பெரிய மனிதர்கள் குளிர் காய்ந்தார்கள் !

மினுமினுப்பு இல்லாத அவன் தத்துவங்கள் மிகப் பலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். அவை மனித இனத்தை அதிகப்படியாக நேசித்த ஒரு மேதையின் கனவு வடிவங்கள். சிந்தனையும், சரித்திரத்தைக் கற்றுணர்ந்த புலமையும் தந்த அந்தக்

— 11ம் பக்கம் —

அடுத்த இதழில்...

**புலித்தேவனா, கட்டபொம்மனா ?**

அறிஞர் எழுதும்

ஆராய்ச்சித் தொடர்கட்டுரை

ஆரம்பமாகிறது !

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

# எண்ணம்

மலர் 5 ‖ 11—10—58 ‖ இதழ் 17

## கலைஞர்கள் ஊர்வலம்

மனித சமுதாயத்தின் பொழுதுபோக்குக்காக ஆதிகாலத்தில் உருவாக்கப்பட்ட கலையும், இலக்கியமும் நாளடைவில் சமுதாய வளர்ச்சிக்கே முழுக் காரணமாக அமைந்துவிட்டன. இன்றைய தினம் வளர்ந்து நிற்கும் எந்த நாடும் அதன் கலையாலும், இலக்கியத்தாலுமே சிறப்புற்று நிற்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஒரு காலத்தில் பொழுதுபோக்கை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பிறந்த கலையும், இலக்கியமும் பின்னாளில் சமூகத்தின் ஆசானாகவே உயர்ந்துவிட்ட அதிசயத்தை, உலகின் சிறந்த நாடுகள் நமக்குப் பறையறைவிக்கின்றன.

அத்தகைய கலை, இலக்கியத்துறையில், தனக்கென குறிப்பிடத்தக்க ஒரு இடத்தைப் பெற்றிருப்பது சினிமாக் கலையாகும். மற்றைய கலைகளைவிட, சினிமாக்கலை ஒன்றுதான் கலையின் முழு வடிவையும் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது. சினிமா ஒன்றின்மூலமே எழுதப் படிக்கத் தெரியாதவர்களிலிருந்து, ஏடெழுத வந்திருப்பவர்கள் வரை புதிய பாடங்களைப் பெற முடியும். ஆம், சினிமா ஒன்றுதான் படித்தவனையும் பாமரனையும் ஒருசேரத் தனது திறமையால் ஈர்க்கும் கலையாக இருக்கிறது. நாட்டில் ஏற்பட விரும்பும் எதனையும் சினிமா, பார்க்கிறவர்களின் இதயத்தைத் தொட்டுச் சொல்கிறது; அழுத்தம் திருத்தமாகத் தெளிவுபடுத்துகிறது.

அதனாலேதான் மக்களின் முன்னேற்றத்திலே பெரும் அளவு அக்கரை கொண்டுள்ள அறிவாளிகள் சினிமாத்துறையைப் பெரிதும் விரும்புகிறார்கள்—தங்களது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான தலைசிறந்த சாதனம் அது என்று. இந்தக் கருத்துக்குத் தாங்கள் முற்றிலும் உடன்பாடானவர்களே என்பதைத் தெரிவிக்கும் முறையிலேயே, நமது ஆட்சியாளர்களும் தாங்கள் விரும்பும் கருத்துக்களையும், செயல்படுத்த வினையும் திட்டங்களையும் செய்திப் படங்கள்மூலம் காட்டுகிறார்கள்.

சினிமா இன்று இந்தியத் துணைக்கண்டத்தின் மிகப்பெரும் தொழில்களில் ஒன்றாகத் திகழ்கிறது. அதன்மூலம் ஆட்சியாளருக்குக் கிடைக்கும் வருமானம், மொத்த வருமானத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பங்கைப் பெறுகிறது.

இவ்வளவு சக்திவாய்ந்த சினிமாத்துறையின் இன்றைய நிலை எவ்வளவு பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது என்பதைத்தான், கடந்த 7-10-58 அன்று சென்னையில் நடைபெற்ற சினிமாத்துறையைச் சேர்ந்த எல்லாப் பகுதிக் கலைஞர்களின் மகத்தான ஊர்வலம் எடுத்துக்காட்டுகிறது. இந்த ஊர்வலம் நடத்திய கலைஞர்களின் கோரிக்கைகள், அவர்களின் சொந்தத் தேவைகளின் அதிகரிப்புக்கானவை அல்ல. தாங்கள் இன்று பெற்றுக்கொண்டிருக்கும் ஊதியத்தை அதிகப்படுத்திக்கொள்வதற்காக அவர்கள் ஊர்வலம் செல்லவில்லை. இன்று சினிமாத்துறையில் ஏற்பட்டிருக்கும் பயங்கரமான நிலைமை, நாளை எந்த உருவெடுத்து அதனையே நம்பியிருக்கும் இலட்சக்கணக்கான குடும்பங்களைச் சுடுகாட்டுக்கு அனுப்பிவைத்து விடுமோ என்ற அச்சமே அவர்களை அவ்வாறு செல்லத் தூண்டி இருக்கிறது.

அப்படிப்பட்ட தொழிலில் இன்று நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழில் முடக்கமின்றிச் செயல்பட வசதியான, மூலப் பொருளான கச்சா பிலிம் (Raw Film) இங்கு உற்பத்தியாவதில்லையாதலால், அது வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டு வந்தது. அந்த இறக்குமதியில் 40% சென்ற ஆண்டிலிருந்து குறைக்கப்பட்டுவிட்டது. இதுதான் இன்றைய பயங்கர நிலையை உருவாக்கிவிட்டிருக்கிறது.

கச்சா பிலிம் முன்போல தாராளமாகக் கிடைக்காததால் படமெடுப்போர் தொடர்ந்து எடுக்க முடியவில்லை. அதனால் ஸ்டுடியோக்களில் 'சூட்டிங்' இல்லை. ஆதலால் அதில் பணியாற்றும் நடிக நடிகையருக்கும், படக் கலைஞர்களுக்கும் வேலை இல்லை.

இந்த நிலை வளர்ந்துகொண்டே போனால் இந்த நாடு ஒரு பெரும் வேலையில்லாத கூட்டத்தைத் தாங்கித் தீர வேண்டிய கட்டாயத்தில் கொண்டு வந்து விடப்படும் என்பதில் சந்தேகமில்லை.

'வெளிநாட்டு இறக்குமதியைக் குறைக்கிறோம்; அன்னியச் செலாவணியைக் குறைக்கிறோம்' என்றெல்லாம் இதில் காரணம் காட்டுவதில் அர்த்தமே கிடையாது. ஏனெனில், இங்கிருந்து வெளிநாடுகளில் திரையிடப்படும் படங்களிலிருந்து பெறப்படும் ஊதியம், இங்கிருந்து கச்சா பிலிமுக்காகச் செல்லும் பணத்தைப்போல் இரண்டு மடங்காகும்.

இந்தக் கட்டுப்பாட்டால் தென்னாடே அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் மத்திய ஆட்சி இந்த விஷயத்தில் அக்கரையில்லாமலிருக்கிறதோ என்ற அச்சமும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் கட்டுப்பாடு நீக்குக் கிளர்ச்சி வெறும் பொழுதுபோக்குக் கிளர்ச்சியல்ல. கலைஞர்களின் பிரச்னைமட்டுமல்ல; நாட்டு மக்களில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியினரின் வாழ்வுப் பிரச்னை.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, கொஞ்சம் புத்திசாலித்தனமாகச் செயல்பட வேண்டியது மத்திய ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

பிரச்னையின் முழு வடிவையும் உணர்ந்து, கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்ய ஆட்சியாளரையும், அதற்கான ஆதரவைத் தேவையான அளவு தந்துதவப் பொதுமக்களையும் வேண்டுகிறோம்.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

நல்லெண்ணத்திலேயோ என்னவோ, மேற்குறித்த பொறுப்பிலிருந்து இந்த வரிகளின்மூலம் ம. பொ. சி. அவர்கள் விடுவித்துக்கொள்கிறார்கள். நிற்க,

ஒரு நடிகருக்கு வலைவீசுவதாக நான் குறிப்பிட்டுள்ள பகுதியைப் பற்றி, "அந்த நடிகர் யார்? 'பிறரும்' என்ற சொல் யாரைக் குறிக்கிறது?" என 'செங்கோல்' ஆசிரியர் கேட்கிறார். "தலைசிறந்த நடிகர்" என்று நான் சொன்ன பிறகு, "அவர் இன்னார்தான்" என்று விளக்கம் தருவது அந்த நடிகரை அவமதிப்பதாகும். விழாவில் கலந்துகொண்டோரில், பிற நடிகர்களே குறிப்பிடும் அளவுக்கு 'தலைசிறந்த நடிகர்' ஒருவர்தான். அவரேதான் என்னால் குறிப்பிடப்பட்டவர்.

அந்த நடிகருக்கு யானே ஒரு பக்கம் வலைவீசியிருப்பதாக, 'செங்கோல்' ஆசிரியர் கூறுகிறார். அபாரத் திறமையோடு அந்தச் 'சிதறிய சிந்தனை' வலைவீசுகிறது என்கிறார். இது உண்மையாகவே இருக்கட்டும். யானோ, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பிறரோ அந்த நடிகருக்கு 'வலைவீசுவது' (அப்படி ஒன்று நடந்தால், அது) தவறாக அமையாது. வீட்டைவிட்டு ஓடிப்போன பிள்ளை திரும்பி வரவேண்டும் என்று விளம்பரம் செய்கிற குடும்பத்திற்கும், அந்தப் பிள்ளையைக் கையைப் பிடித்து இழுத்துத் தன் வீட்டில் அடைக்க முயல்கிறவர்களுக்கும் வித்தியாசமுண்டு. ஆனால், இந்த 'வலைவீச்சு'முறையில் நிச்சயமாக நான் இறங்கவில்லை. தோழர் கணேசனின் திறமையை மதித்து, மக்களுக்கும் அவருக்கும் பிணைப்பு வேண்டும் என்கிற எண்ணத்தில் எழுதப்பட்டதுதான் அந்தச் 'சிதறிய சிந்தனை.' அதை ஒவ்வொரு கட்டத்திலும் தெளிவாக்கிக் கொண்டு வந்திருக்கிறேன். 'கழகஞ்சார்ந்தவர்கள் மட்டுமே மக்களல்ல' என்றும் கூறியிருக்கிறேன். 'எங்கிருந்தாலும் வளர்க!' என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதையும் எடுத்துக் காட்டியிருக்கிறேன். 'யானும் அதனையே கூற விழைகிறேன்' என்று முடிவுரைக்கு வந்திருக்கிறேன். 'புத்தி சொல்வது என் வேலையல்ல' என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறேன். 'சிதறிய சிந்தனை' யாருக்காக எழுதப்பட்டதோ, அது அவரை வளர்க்கவே பயன்படும். அதை முழுக்கப் படித்த பிறகு கூடவா "வலைவீச்சு" என்று கருதுகிறார் 'செங்கோல்' ஆசிரியர்!

தான் வலை வீசவில்லை என்று அவர் தெளிவுபடுத்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். வாழ்க!

திரு. டி. கே. சண்முகம் அவர்கள், நாத்திகம் பற்றி, விழாவில் பேசிய பேச்சுக்கு மறுப்புத்தர வந்தது, 'நான் நாத்திகன்' என்ற காரணத்தினால் அல்ல; அது பாரதியின் தெளிவான கொள்கை அல்ல என்பதனால்தான்.

எட்டயபுரம் பேச்சுக்களில் பாரதியின் நெஞ்சில் தத்தம் கொள்கைகளைப் பலர் திணித்தனர் என்பது உண்மை. அப்படித் திணித்தவர்கள், திணிப்புக்கலையில் வல்லவர்களா, அல்லவா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் பெரும்பாலோர் பாரதி நின்ற இடத்துக்குத் தாங்கள் போகவில்லை என்பதையும், தாங்கள் நின்ற இடத்துக்குப் பாரதியை இழுத்தார்கள் என்பதையும் மறுபடியும் அந்தப் பேச்சுக்களைப் படித்துப் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும்.

விழாவில் யாரும் ஒரு குறிப்பிட்ட கட்சியைத் தாக்கிப் பேசவோ, தாங்கிப் பேசவோ முன்வரவில்லை என்கிறார் 'செங்கோல்' ஆசிரியர். இந்த நாகரிகம் பாரதியின் 'சந்நிதான'த்திலாவது உதித்ததே என்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து, சென்னையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவில், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் கலைக்காட்சிகளுக்குப் பொறுப்பேற்றது பற்றிச் 'செங்கோல்' ஆசிரியர் குறிப்பிடுகிறார். அது கலைக்காட்சி - நாடகம், நடனம், இன்னோரன்ன பிற. இதில் அமைச்சர்களோடு கலைஞர்கள் உறவாடுவதும், கலைஞர்களோடு அமைச்சர்கள் உறவாடுவதும் ஒரு குறிப்பிட்ட மரியாதை எல்லையோடு நின்று விடும். மேலும், இது பிரச்சினைக்கு இடமளிப்பதல்ல என்பதையும் ம. பொ. சி. அவர்கள் அறிந்துகொள்வது நலம்.

முடிவாக, ம. பொ. சி. அவர்கள் ஆசைப்படுவது போல் தமிழர்களின் ஒற்றுமையை வளர்க்கவே இதுகாறும் எனது எழுதுகோல் பயன்பட்டு வந்திருக்கிறது. இன்னும் சற்று விரிவாக, தெளிவாக திராவிடர்களின் ஒற்றுமையைப் பலப்படுத்த அது அதிகம் பயன்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், கொள்கையால் ஈர்க்கப்பட்டு கட்சிக்குள் நுழைந்தவனே நான். நான் எந்தக் கொள்கையை என் உயிராக ஏற்றுக்கொண்டேனோ, அந்தக் கொள்கையின் வெற்றியைக் குறியாக வைத்தே பயணம் போய்க் கொண்டிருக்கிறேன். தமிழர்களுக்குள்ளும் ஒற்றுமை வேண்டும்; திராவிடர்களுக்குள்ளும் ஒற்றுமை வேண்டும்.

'செங்கோ'லுக்கெழுந்த சினம் தணிந்து, இன்னும் தன் கொள்கைகளை அழுத்தமாகத் துருவிப் பார்த்து, யான் நம்பும் பிரிவினைக் கொள்கை சரி என்று கண்டுபிடிக்குமானால் மிக்க மகிழ்வேன். ★

### திருத்தம்

இந்த இதழ் பக்கம் 9-ல், கண்ணதாசன் (முன்னுரைக்) கவிதை வரி 13-ல், 'கொடும் புலியின் மாலையுடன்' என்றிருப்பதை, 'கொடும் பல்லின் மாலையுடன்' என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

கருத்தரங்கம்—3.

# நடிப்பிசைப் புலவர்

நீண்டகால உறக்கத்திலிருந்து இந்தத் தமிழகம் விடுபட்டெழுந்தபோது, அதனை எதிர்நோக்கிப் புரண்டோடி வந்த புதுமை வெள்ளத்தைக் கண்டு மலைக்காமல் அஞ்சாமல், வாழ்த்தொலி கிளப்பி வரவேற்பளிக்க ஒரு சிலரே முன் வரிசையில் வந்து நின்றார்கள். இந்தத் துணிச்சல் மிக்க மனிதர்களில் நமது நடிப்பிசைப் புலவர் இராமசாமி அவர்கள் குறிப்பிடத் தகுந்த ஒருவராவார்.

நடிப்பிசைப் புலவர் இராமசாமி அவர்கள், காலங்கடந்த நூற்றாண்டில், தவறான நாட்டில் பிறந்துவிட்டார் என்று சொல்லலாம். பதினான்கு பதினைந்தாவது நூற்றாண்டில், ஸ்பெயின், போர்த்துகல் போன்ற நாடுகளில் அவர் பிறந்திருந்தால், நிச்சயம் ஓர் புதுக் கண்டத்தைக் கண்டுபிடித்திருப்பார்; அல்லது உலகக் கடல்கள் அத்தனையின் விஸ்திரணத்தையும் பிரயாணம் செய்து அளந்துவிட்டிருப்பார். அத்தகைய துணிச்சலும் அஞ்சாமையும் நிரம்பியது அவரது வாழ்க்கை. தனது எதிர்கால வாழ்க்கையைப் பற்றி எப்போதுமே கவலைப்படாதிருந்தாலும், நாட்டின் எதிர்கால வாழ்க்கைக்கு நல்ல பல அடிப்படைச் செயல்களைச் செய்து காட்டிவிட்ட திருப்தியில் பூரித்துப் பெருமைப்பட அவருக்கு உரிமை உண்டு.

அவருடைய வாழ்க்கையும் செயலும் நாட்டு வரலாற்றுடன் பின்னிப் பிணைக்கக்கூடியதாக இல்லாமலிருக்கலாம், ஆனால் இந்த நாட்டின், உண்மையான வரலாற்றை அறிய இந்தத் தலைமுறையினர்க்கு ஏற்பட்டிருக்கும் குறு குறுப்பான ஆர்வத்திற்குத் தூண்டுகோலாக இருந்த முக்கியமானவர்களில், அவரும் ஒருவர் என்பதை நாம் விருப்பு வெறுப்பின்றி ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

மக்களுக்குப் பயன்தர வேண்டிய அனைத்தும், கோபுர உச்சியில் அமர்ந்துகொண்டிருந்த விரும்பத்தகாத நிலையைப்போலவே நாடகக் கலையும் இந்த நாட்டில் - கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புவரை - இருந்து வந்திருக்கிறது. உயர்வான ‘அந்தஸ்து’ பெற்றிருக்கும் சிலரே எல்லாவற்றிற்கும் ஏகபோகஉரிமை கொண்டாடுபவர்களாகவும், ‘பாஷ்யம்’ கூறுபவர்களாவும் இருந்த நாளில், நாடகக்கலையும் அவர்கள் பூதப்பிடிப்புக்குத் தப்பவில்லை. ‘கலை கலைக்காகவே’ என்கிற போலித் திரையைப் போட்டு மூடி, அந்தக் கலையின் உயர்வானதோர் பகுதியாக இருந்த நாடகக் கலையையும் தங்கள் ‘அந்தஸ்து’ உயர்வுக்காகவே பயன்படுத்தி வந்தனர். அரசியல், பொருளாதாரம், சமுதாயம், இலக்கியம் ஆகிய அத்துணைத் துறையிலும் ஏற்பட்ட வெடிப்பும் சலசலப்பும், நாடகக்கலையை நெடுங்காலத்திற்கு அண்டாமலே இருந்தன. சமுதாயம், இலக்கியம் போன்றவைகளில் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் முழு ஆதிக்கம் செலுத்த முனைந்துவிட்டபோதும் நாடகக்கலை இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த நிலையிலேயே ஆடாமல் அசையாமல் மிதந்துகொண்டிருந்தது.

இந்த ஓர் வகையிலேதான் அகில உலகத்திலும் இல்லாததொரு ‘அதிசயம்’ இந்த நாட்டில் நடந்திருக்கிறது. வாழ்நாள் எந்தத் துறையில் மறுமலர்ச்சி என்றாலும் அது இலக்கியம் நாடகம்மூலம் வேர் விட்ட பின்னரே சாதாரண மனித வாழ்வில் இரண்டறக் கலப்பதுதான் உலகின் நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், இந்த நாட்டில் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் தங்கள் தங்கள் இதயநாடியைத் தொட்டு கரைத்த பின்னரே, தனக்கு வழிகாட்டிகளாக இருக்கும் அத்துணைத் துறையிலும் மறுமலர்ச்சிதேவை என்பதை மக்கள் உணர்ந்தனர்.

அத்தகைய தேவையை நிறைவு செய்யும் துணிச்சல் மிக்க மனிதர்களை எதிர்நோக்கித் தவமும் கிடந்தனர்.

மறுமலர்ச்சிக் கருத்துக்கள் காற்றுவாக்கில் இங்கு நுழைந்து தங்கள் புலன்களைத் தொடுவதின் விளைவாகவே மக்கள் வாழ்வில் ஏற்படும் தலைகீழ் மாறுதலைக் கவனித்த ‘ஆதிக்கச் சக்திகள்,’ அதனை இங்கேயே ‘பயிர் செய்து’ விநியோகிப்பதாலுண்டாகும் மிகப் பயங்கர விளைவை எண்ணிப் பார்த்துத் தங்களால் முடிந்த எல்லா வகையிலும் முட்டுக்கட்டையிட முனைந்து வேலை செய்தன!

இதுபோன்ற கட்டுப்பாடான அழிவு வேலையின் காரணமாகத்தான், இந்த நாட்டில், இந்த நூற்றாண்டின் துவக்கம் வரையில்கூட, ‘சிருஷ்டிச் சக்திகள்’ எந்தத் துறையிலும் தலைகாட்ட அஞ்சின.

அஞ்சி அஞ்சிச் செத்த தலைமுறையினர், அவ்வப்போது காட்டிய வீரமும், தியாக உணர்வும் கடந்த தலைமுறையில் ஒன்றுசேர்ந்து பிரணவ கோஷத்துடன் பீறிட்டுக் கிளம்பின.

கவிதைத் துறையில் பாரதியார், பாரதிதாசன், இலக்கியத்துறையில் வ. ரா. புதுமைப்பித்தன், மொழித் துறையில் மறைமலையடிகள், திரு. வி. க. சமுதாயத்துறையில் பெரியார் இராமசாமி, பொருளாதாரத் துறையில் சிங்காரவேலர், சக்கரைச் செட்டியார் போன்றவர்கள் போரிடக் கிளம்பினர். இந்தச் சந்தடியில் நாடகக் கலை என்றும்போல் ‘ராஜ நடை’ போடுவது தட்டுத் தடங்கலின்றியே நிகழ்ந்து வந்தது. (இதில் பம்மல் சம்பந்தனார் அவர்கள் பணியாற்றினார் என்றாலும், சாதாரண மக்களின் உள்ளத்தை ஈர்க்கும் அளவுக்கு அவரது நாடகங்கள் தனித்தன்மை பொருந்தியதாக இல்லை. கலையின் வளர்ச்சி கருதி இயற்றப்பட்டதுதான் அவரது நாடகங்கள் என்று சொல்லப்படுகிறதேதவிர, சாதாரண மக்களின் வாழ்வும் அதன் உயர்வும் அவர் நாடகங்களில் அவ்வளவாகப் பிரதிபலிக்கவில்லை.) இந்த நிலையில்தான் இலக்கியப் புதுமையின் பக்கமே தனது கவனத்தைத் திருப்பியிருந்த அறிஞர் அண்ணா அவர்கள், நாடகத்தின் சார்பிலும் தன்னை ஓர் தளகர்த்தராக மக்கள் மன்றத்திலே பதிவு செய்துகொண்டார். இலக்கியத் துறைக்கு ஏற்றத்தைக் காட்டிய அவர், நாடகத்துறையின் சிருஷ்டிச் சக்தியாகவே உருமாறிவிட்டார்.

அவருடைய அரும்புச் சிருஷ்டியான ‘சிவாஜி கண்ட இந்துராஜ்யம்’ (பின்னர் அது ‘சந்திரமோகன்’) நாடகத்துறையில் மறுமலர்ச்சி ஏற்படத் தயங்கிக்கிடந்த அனைவரின் நெஞ்சத்தையும் நெகிழவைத்தது. அதேபோல் ஒரு சிலரின் அடிமடியில் நெருப்பை வைத்துக் கட்டவும் அது தவறவில்லை.

அதற்குப் பிறகுபொதுமக்களுக்கு அதிகமாகத் தெரியவராத-ஆனால் ‘சிருஷ்டிகர்த்தா’வுக்குரிய உண்மையான தனித் தன்மையுடன் கூடிய பலப்பல (சிறு சிறு) நாடகங்கள் அவரால் நாட்டுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன!

இறுதியாக மறுமலர்ச்சிச் சகாப்தத்தின் முழு வளர்ச்சி பெற்ற நிலைக்கு இந்த நாட்டின் நாடகக் கலை வளர்ந்துவிட்டதின் அறிகுறியாக ‘வேலைக்காரி’, ‘ஓர் இரவு’ நாடகங்கள் உலா வரத் தொடங்கின! நெடுந் தூரம் ஓடிவிட்ட மற்ற சமுதாயத்தின் நாடகக் கலை வளர்ச்சியை இந்தச் சமுதாயமும் எட்டிப் பிடித்துவிட்டது!

தமிழகத்தில் ஓர் ‘பெர்னாட்ஷா’ பிறந்து வளர்ந்து வந்திருக்கிறார் என்பது ஒரு முகமாக ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது. ‘கலை கலைக்காகவே’ என்கிற பொய்மைத் தத்துவம் புதை குழிக்கு ஓடக் கணிசமான அடி கொடுத்த நெஞ்சழுத்தக்காரன் பெர்னாட்ஷா! அவனுடைய தமிழகத்துப் பதிப்பான அறிஞர் அண்ணா அவர்கள் நாடகங்களிலும் இத்தகைய ‘மரண அடி’க் காட்சிகள் நிரம்பி வழிந்தன.

பத்துத் தலைகள், சிங்க முகம், பூதாகாரமான உடற்கட்டு, மனிதன் படுத்துறங்கும் நீளமும் அடர்த்தியுமுள்ள மீசை ஆகியவைகளைக் கொண்டோரே கொடுமைகளின் சின்னங்கள் என்று சித்தரிக்கப்பட்ட நிலைமாறி, கொடுமை உற்றக்கால், நம்போன்ற நம்மிடையே வாழும் மனிதர்களில் சிலர்தான் என்று கலையுலகமே பகிரங்கமாகப் பறைசாற்றத் தலைப்பட்டது.

இந்தப் பறையறையும் வேலையைத் திறமையுடன் செய்து முடிக்கு முன் வந்த முதல் பெருமைக்கு நம்முடைய நடிப்பிசைப் புலவர் ஒருவர்தான் பாத்திரமாகிறார்.

தனக்குள்ளே புறையோடிப் போயிருக்கும் அருவருக்கத்தக்க ஆபாசக் கோட்பாடுகள், விரும்பத்தகாத நடைமுறைகள், வெறுத்தொதுக்க வேண்டிய பழக்க வழக்கங்களை, காதால் கேட்பதற்கே விரும்பாதிருந்த இந்தச் சமுதாயம், அவைகளை நேருக்கு நேராக உயிர்பெற்ற நடிப்பின்மூலம் காண்பதற்கு முகஞ்சுளித்த காலத்தில், அத்தகைய பாத்திரங்களை ஏற்று நடிப்பதுதான் என் கடமை என்று பரணி பாடிப் புறப்பட்ட அஞ்சா நெஞ்சன் நடிப்பிசைப் புலவர் அவர்கள்.

அவருக்கு முன்னால் சமுதாய நாடகங்களில் மிகத் திறமையாக நடித்தவர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள், நல்ல சக்திகளின் உயர்வையும் தீமையின் முடிவையும் மட்டுமே விவரிக்கும் போதகாசிரியர்களாக வலம் வந்தார்கள். ஆனால், தீமைக்குக் கிடைக்கும் பலம் எங்கிருந்து வருகிறது என்பதை பாத்திர வாயிலாகத் துணிந்து சொல்ல இந்தத் தமிழகத்தில், அறிஞர் அண்ணாவுக்கு முன்னால் யாரும் துணிவு பெறவில்லை; நடிப்பிசைப் புலவருக்கு முன்னால் நடித்துக் காட்ட முன் வரவில்லை. இந்த நாட்டின் வீரம் விளக்கப்பட்டிருக்கலாம்; கொடுமைகளைத் தாங்கும் சக்தி விமர்சிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் கொடுமைகளைச் சகித்துப் பொறுமையைக் காட்டும் வீரமுடைய நெஞ்சத்தின் குமுறலைக் காட்ட நமது நடிப்பிசைப் புலவருக்கு முன்பாக யாரும் முயற்சி செய்யவில்லை. அவரைவிடத் திறமையாக நடிப்பவர்கள் அப்போதும் இருந்தார்கள்; இப்போதும் பலர் இருக்கலாம். ஆனால், அவர் ஆழம் பார்த்து இறங்காமல், ‘வருவது வரட்டும்’ என்ற துணிச்சலில் அந்த நாளில் புதுமைக் கருத்துக்களைப் பரப்ப முன் வந்தவர் என்பதை இந்தத் தலைமுறையினர் மறந்துவிடக் கூடாது. அவர் ‘மூழ்கி’விடவில்லை என்பது தெரிந்த பிறகே அதே முறையில் பாத்திரம் ஏற்று நடிக்கப் பலர் முன் வந்தனர். ‘வேலைக்காரி’ பாணியும், ‘ஆனந்தன்’ நடையும் மதியாத எந்தக் கதையும் இன்று நாடகமாகவோ, திரைப் படமாகவோ வருவதில்லை என்பதைப் பார்க்கும்போது நடிப்பிசைப் புலவரின் பெருமை ‘பளிச்’செனத் தெரியத்தான் செய்கிறது. இன்று அவருடைய நடிப்பு எல்லோரும் மலைக்கும்படியாக இல்லாமலிருக்கலாம்; அதற்கு உரம் ஊட்டி வழி காட்டியவர் அவர் என்பதை நாடு மறக்காது; நல்லோர் மறக்கார். அவர் நடிகர் மட்டுமல்ல, நெஞ்சழுத்தம் கொண்ட சீர்திருத்தவாதி. சொல்வதைப் பதியச் சொல்லும் சொற்பொழிவாளர். அதிகார சக்திகளின் கோபப் பார்வைக்கு இலக்கான தீவிரவாதி. தான் காத்த விடுதலை இயக்கத்தின் போராட்டங்களிலே ஈடுபட்டு இன்னலும் சிறைவாசமும் ஏற்றுக்கொள்ளத் தயங்காத அரசியல் வாதி. அனைத்துக்கும் மேலாக நாளைய தேவைக்காக இன்று வரும் பொருளில் மிச்சம் பிடிக்கத் தெரியாத ‘கொடையாளி’

கடந்த ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னால், தமிழகத்தின் நாடகக் கலை, இரண்டு மூன்று பேரின் உழைப்பையும் வாழ்வையுமே நம்பி ஊசலாடிக்கொண்டிருந்தது. அந்த இரண்டொருவரில் நடிப்பிசைப் புலவரும் ஒருவர். நாடகக் கலை வளர்ச்சியைப்பற்றி வாய் கிழியப் பேசுவோர் நடிப்பிசைப் புலவருக்கு நியாயமான காணிக்கை செலுத்த கடமைப்பட்டிருக்கிறார்கள்.

செத்ததற்குப் பின்னால்தான் சிலை எழுப்பி அதற்கொரு மண்டபம் கட்டுவது என்ற விடாப்பிடியான செய்கையை மரபாகக் கொண்டிருக்கும் தமிழகத்திற்கு, நடிப்பிசைப் புலவர்மட்டும் விதி விலக்காகப்படுவார் என்பதை நம்புவதற்கில்லை.

—மு. சண்முகம்.

# சிவகாமி

— சென்ற இதழ் தொடர்ச்சி —

ராஜாமணியின் நிலத்தின்மீது ராமசாமித் தேவருக்கு எப்போதுமே ஒருகண். அவனுடைய நிலத்தையும் தனக்கே வாங்கிக்கொண்டு விட்டால், அந்தப் பகுதி நிலம் முழுவதிலும் தம் கொடியே கட்டிப் பறக்கும் என்பது அவருடைய திட்டம். திட்டத்தைச் செயல்படுத்துவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் அவர்.

ஒருநாள் மாலை. ராஜாமணி தனது வயல் வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, வீட்டுக்குப் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தான். அது, வயலில் சோளப்பயிர் ஆள்மட்டத்துக்கு வளர்ந்து, கதிர்கள் பொதி வந்திருந்த காலம். அதனுல் வயலின் நான்கு பகுதிகளையும் பார்த்துவிட்டு, புறப்படத் தயாராஞன் ராஜாமணி. அப்போதுதான் வயலின் ஒரு மூலையிலிருந்த கிணற்றிலிருந்து 'தொபுகடீர்'எனும் சத்தம் எழுந்தது. அந்தச் சத்தம் உண்மையில் அவனைக்கலங்க வைத்துவிட்டது. யாரோ விழுந்து தான் விட்டார்கள் என்று உறுதிப்படுத்திக் கொண்டு, கிணற்றை நோக்கி ஓடிஞன் அவன்.

அங்கே போய்ப் பார்த்தபோது அவன் நினைத்தது சரியாகவே இருந்தது. யாரோ ஒரு பெண் கிணற்றுக்குள் தத்தளித்துக்கொண்டிருந்தாள்.

ராஜாமணி கிணற்றுக்குள் பாய்ந்தான். கண்மூடித் திறப்பதற்குள் அவளைத் தூக்கிக்கொண்டு மேலே வந்தான். அதற்குள் அவளுக்கு மயக்கம் வந்துவிட்டது. அவளைத் தரையில் கிடத்திவிட்டு, நனைந்து போன தன் உடையைப் பிழியத் தொடங்கிஞன். அவனை அறியாமலே அவனது கண்கள் அவளது மேனியில் மொய்த்தன.

மயங்கிக் கிடக்கும்போதும் உள்ளத்தில் புது உணர்வுகளைத் தூண்டிவிடும் அவளுடைய பேரழகு, வாலிபஞன ராஜாமணியைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லைதான். அவன் அவளைப் பார்த்தான். அவளது அருகில் உட்கார்ந்து கொண்டு, வைத்த விழி வாங்காமல், அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

மயக்கம் நீங்கிக் கண்விழித்தபோது, அவனை மிகுந்த ஆச்சரியத்தோடும், நன்றியறிதலோடும் பார்த்தாள் அந்தப் பெண். செயற்கரிய செயல் புரிந்த ஒருவரைக் காணும் உணர்வு அவளுடைய பார்வையில் மிதந்தது. பிறகு அவள், படுத்துக் கிடக்கும் தன் அருகில் வாலிபன் ஒருவன் நின்றுகொண்டு தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்தாள். அது அவளுக்கு வெட்கத்தை அளித்திருக்க வேண்டும். அவசர அவசரமாக எழுந்தாள்.

'பரவாயில்லை, பரவாயில்லை. நான் வேண்டுமானுல் அந்தப் பக்கம் போய்விடுகிறேன்...!' என்றுன் அதைக் கவனித்த ராஜாமணி.

'இல்லை...இப்போது எல்லாம் சரியாகி விட்டது' என்று எழுந்தாள் அவள்.

'நீ, சிவகாமி இல்லை...?' என்றுன் அவன்.

'ஆமாம்...உங்களுக்குத்தான் என்னை மறந்து போச்சு. எதிர்வீட்டில் இருந்தும் இப்படி அடையாளம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேமே!...' என்றுள் அவள்.

'சின்னப்பிள்ளையா இருக்கிறப்போ உன்னைப் பார்த்தது.. நான் எங்கே வீட்டில் இருக்கிறேன்! எப்போது பார்த்தாலும் வயல் வேலையாக அலைவதுதான் வழக்கமாகப் போச்சே!...'

பிறகும் அவனே பேசிஞன் :

'சிவகாமி! நீ எவ்வளவு அழகாக வளர்ந்துட்டே!'

அவனுடைய அந்த அப்பட்டமான மதிப்பீடு அவளை மேலும் வெட்கமடைய வைத்துவிட்டது.

'சரிதான் போங்கள்...இப்படியா ஒரு பெண்ணிடம் பேசுவது?'...'

'பின்னே, ஒரு பெண்ணிடம் போய் நீ அழகாயில்லை'ண்ணு சொல்றது?...'

அந்த நேரத்திலும் அவனுடைய அந்தக் கிண்டலைச் சுவையாக ரசித்தாள் அவள்.

'சரி.. நேரமாச்சு. நான் வர்ரேன்...'

புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்த அவளை நிறுத்திவிட்டு, அவன் கேட்டான் :

'ஆமா...அடிக்கடி இந்தப் பக்கம் எதிர்பார்க்கலாமில்ல...?'

'ஓ...வர்ரேன்...!'

'வா!...ஆனு ஒண்ணு, வர்ரப்போவெல்லாம் இப்படிக் கிணற்றிலே விழுந்து தொலைக்காதே; ஜாக்கிரதை!'

அவள் சிரித்துக்கொண்டே நடந்தாள். அவன் ரசித்துப் பார்த்துக்கொண்டே நின்றுன் நெடுநேரம்.

★

ராஜாமணியால் இப்போது சிவகாமியைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. சிவகாமியாலும் அவனைச் சந்திக்காமலிருக்க முடியவில்லை. பகலெல்லாம் அவர்கள் வயல்வெளிகளில் சந்தித்தார்கள்; பேசிஞர்கள். தினமும் அப்படிப் பேசுவதற்கு என்னதான் சேதிகள் இருந்தனவோ, யாருக்குத் தெரியும்! அவர்களுக்காவது தெரிந்திருக்குமோ என்னவோ!

திடீரென ஒரு நாள், ராமசாமித் தேவர் அழைப்பதாக ஒரு ஆள் வந்தான் ராஜாமணியிடம்.

ராஜாமணிக்கு ஒரே திகைப்பு. சிவகாமியைப் பற்றிய சேதியாக அது இருக்குமோ என்ற அச்சம் அவனுக்கு. மிகுந்த கவலையோடு எதிர் வீட்டினுள் நுழைந்தான் அவன்.

'வா, ராஜாமணி! உட்கார்!' என்று உபசரித்தார் தேவர்.

'பரவாயில்லீங்க; நிற்கிறேன்' என்று மரியாதையாக நின்றுன் ராஜாமணி.

'உன்னை ரொம்ப நாளா கேட்கணும்'ணு இருந்தேன்; இப்போதான் சந்தர்ப்பம் கிடைச்சுது. விஷயம் ஒண்ணும் அவ்வளவு பிரமாதமில்லை. உன் நிலத்தைச் சுத்தி என் நிலம்தான் இருக்குது. அந்த ஒரே ஒரு வயலையும் ஒரு நல்ல விலை வச்சு எனக்குக் குடுத்திட்டா,அந்தப் பகுதி பூராவும் என்னுதா ஆயிடும். அந்த இடத்துக்குப் பதிலா உனக்கு வேறே நல்ல இடமா, அதைப்போல ரெண்டு மடங்கு நிலமா வாங்கித் தர்ரேன். என்ன சொல்றே?...' என்று கேட்டார் ராமசாமித் தேவர்.

ராஜாமணிக்கு அவர் அழைத்ததன் காரணம் தெளிவாக விளங்கிவிட்டது. சிவகாமி விஷயம் அல்ல அது என்பதிலே ஒருபக்கம் திருப்தி என்றுலும், தன்னுடைய முன்னேரின் சொத்தான அந்த நிலத்தை அவர் கேட்கிருரே என்பதில் வருத்தமாகவே இருந்தது அவனுக்கு.

அந்த நிலம் அவனுகச் சம்பாதித்து வாங்கியதல்ல. பரம்பரையாக அவனுடைய குடும்பத்தாரிடம் இருக்கும் பூமி அது. அதை எப்படி விட்டுவிடுவது? என்னதான் பணம் கிடைத்தாலும் பாட்டன், பூட்டன் காலத்து நிலத்தை எப்படி விடுவது? ஒருவேளை அவர் சிவகாமியின் அப்பா என்பதனுல் தான் விட்டுக் கொடுத்துவிட்டாலும், தம்பி எப்படி அதைச் சகித்துக்கொள்வான்?

ராஜாமணி சிறிதுநேரம் குழம்பிஞன்.

'கொஞ்சம் அவகாசம் கொடுங்க; யோசனை பண்ணிச் சொல்றேன்!'

ராமசாமித் தேவரிடம் விடைபெற்று வந்த பிறகு. மாலையில் சிவகாமியைக் கண்டபோது, அவளும் அதைப்பற்றியே பேசிஞள்.

'அப்பா சொல்றபடி செய்றதுல உங்களுக்கு என்ன நட்டம்?'

இரவு தம்பியிடம் அதுபற்றிப் பேசிஞன் ராஜாமணி தம்பி முத்தையா பிடிவாதக்காரன். சொன்னுல் சொன்னபடி நிற்பவன் அவனுக்கு எப்போதுமே ராமசாமித் தேவரைப் பிடிக்காது. அப்படிப்பட்டவன் அவ்வளவு சாதாரணமாக இதற்குச் சம்மதித்து விடுவாஞ என்ன! அவனுக்கு அதைப் பற்றிப் பேசுவதே பிடிக்கவில்லை

அவன் உறுதியாகச் சொன்ஞன் :

'எனக்கு எப்போதுமே ஒரே முடிவுதான். இந்த நிலத்தாலே நாம பிரிய வேண்டியிருக்குமோண்'ணு நான் கவலைப்படுறேன். கட்டாயமாக் குடுத்தாகணும்'ணு நீ முடிவு செய்துட்டா, ஒண்ணுசெய் : அதிலே உன் பங்கு நிலத்தை மட்டும் வேணுமாஞ கொடுத்துடு. எனக்கு மானம், மரியாதை, சொரணையெல்லாம் உண்டு!'

தம்பி சூடாகவே பேசிஞன்;அதன் மூலம் ராஜாமணியையும் சூடாக்கிஞன்.

கடைசியில் ராஜாமணி, தேவரிடம் இப்படித் தான் முடிவு சொல்ல வேண்டியதாயிற்று :

'நிலத்தை உங்களுக்குத் தர முடியவில்லை; மன்னிச்சுக்குங்க!'

'ஓஹோ! அவ்வளவு தூரம் வளர்ந்திட்டயா? ராமசாமித் தேவன் நெனைச்சதைச் செய்யாம இருந்ததில்லை. பார்க்கிறேன் ஒருகை!' —தேவர் இப்படித்தான் அவனுக்கு விடை கொடுத்தார்.

சிவகாமியைச் சமாதானம் செய்ய ராஜாமணி அரும்பாடு படத் தேவையில்லாமல் போய்விட்டது. அவள் முதலில் அப்பாவுக்காகப் பேசிஞலும், கடைசியில் அவருடைய மிரட்டலைக் கேள்விப்பட்ட பிறகு, வழக்கம்போல் அவன் பக்கமே சாய்ந்துவிட்டாள்.

ராமசாமித் தேவரால் நிலத்தை வாங்க முடியவில்லை என்றுலும், நிச்சயமாக. ராஜாமணியை 'ஒரு கை பார்க்க' முடிந்துதான் விட்டது.

ராஜாமணியைச் சுற்றி 'வேவு பார்'த்துக்கொண்டிருந்த ராமசாமித் தேவரின் ஆட்கள், திடீரென்று ஒரு நாள் சிவகாமியோடு அவனைக் 'கையும் களவு'மாகப் பிடித்துவிட்டார்கள். ராஜாமணி பலத்த காயங்களோடு வீட்டுத் திண்ணையில் வீசி எறியப்பட்டான். சிவகாமி அழுதாள். அடக்கமுடியாமல் அழுதாள். அவளால் வேறு என்னதான் செய்ய முடியும்!

ஊரில் சேதி பரவியது. 'குசுகுசு' வென்று பேசிஞர்கள்; கூடிக்கூடிப் பேசிஞர்கள். பிறகு ஊர்க்கூட்டம் போட்டே பேசிஞர்கள். 'அவனை உயிரோடு விடப்போவதில்லை' எனக் கர்ஜித்தார் தேவர். பலர் தாங்கிஞர்கள்; சமாதானம் செய்ய முயன்றுர்கள். கடைசியில் ஊருக்காக

ப. புகழேந்தி

சமாதானப் பேச்சுகளில் ஈடுபட்டுக் கொண்டு, தனியாகத் தம்ஆட்களைக் கொண்டு ராஜாமணியைத் தீர்த்துக் கட்டிவிட ஏற்பாடு செய்தார் தேவர். அவருக்கு இரண்டு கோபம்: சிவகாமி விஷயத்தோடு, நிலம் தர மறுத்துவிட்டதும் சேர்ந்துவிட்டது!


ராஜாமணி 'திடீர் திடீ'ரென்று அடிக்கப் பட்டு, பிறகு யாராலாவது காப்பாற்றப்பட்டு வீட்டுக்குக் கொண்டு வரப்படுவது வழக்கமாகிவிட்டது. மாதத்தில் பதினைந்து நாட்கள் படுக்கையில்தான்.

கடைசியில்தான் ராஜாமணியும், முத்தையாவும், அவனுடைய நண்பன் செல்லையாவும் கூடிப் பேசி அந்த முடிவுக்கு வந்தார்கள்.

ராஜாமணி ஐந்தாறு மாதம் எங்காவது வெளியூர் போய்விட்டு வர வேண்டும். அவனைத் தொடர்ந்து காணுதது காரணமாக ராமசாமித் தேவரின் மனம் மாறுதலடைந்துவிடக்கூடும். பிறகு பெரியவர்களைக் கொண்டு அவரிடம் பேசி, சிவகாமி விஷயத்தையும் முடிவு செய்து கொள்ளலாம்!

ராஜாமணி முதலில் சம்மதிக்கவில்லை. பிறகு அவர்களின்

— 8-ம் பக்கம் —



★
எங்கும் கிடைக்கும்.




'**நா**லுகோட்டை சசிவர்ணத் தேவர்' சிவகெங்கைச் சீமையின் அரசரானதும், தனக்கு வழி காட்டிய ஞானி சாத்தப்பையரைப் போய்ச்சந்தித்தார். ஞானி சாத்தப்பையருக்கு அழகிய மடம் ஒன்று கட்டித் தந்தார். அதன் வளர்ச்சிக்காக மானியங்களை வழங்கினார். இந்த மடம் இன்று வரை அழிவில்லாமல் இருந்து வருகிறது.

சசிவர்ணரின் காலத்தில் சிவகெங்கைச் சீமையில் ஓரளவு அமைதி நிலவிற்று. என்றாலும் இராமநாதபுரம் சீமையில் குழப்பம் மிகுந்தது. மதுரையிலே ஆற்காட்டு நவாபின் மகனான சாப்தர் அலிகானும், அவன் மருமகனான சந்தா சாகிபுவும் போர்ப் புயல் கிளப்பினர். இது மதுரையில் இராணி மீனாட்சியின் காலம். பாண்டிய மண்டலத்தின் வரலாற்றிலேயே மிகப் பழுதடைந்த காலம் இதுதான். ஆற்காட்டு நவாபுவுக்கு பாண்டிய மண்டலத்துக்குள் ஊடுருவும் சக்தி அதிகமாக இருந்த காலம் இது. பலவீனமான பகுதிகளெல்லாம் தன்னைச் சார்ந்தவையே என நவாப் கருதிக் கொண்டிருந்தான். மதுரையும், தஞ்சையும்கூட அவனுக்குக் கப்பம் கட்டும் சூழ்நிலை இருந்தது. மராத்தியர் படையெடுப்பும், நவாபுகள் படையெடுப்பும், தென்பகுதியைச் சீர்குலையச் செய்தன. இரண்டு மாதங்களுக்கொருமுறை, தொடர்ந்து போர்கள் வந்துகொண்டேயிருந்தன. சுமார் இருபதாண்டு காலம் புயலில் சிக்கிய கலம் போல மொத்தத் தமிழகமே தத்தளித்தது. இந்த நாட்களில் கப்பம் என்ற பேச்சே இல்லாமல் ஓரளவுக்கு அமைதியோடு ஆளப்பட்ட பகுதிகள் சிவகெங்கையும், பாஞ்சாலங்குறிச்சியுமே ஆகும்.

1760-க்குள் இராமநாதபுரம் சீமை நசுக்கப்பட்டு நலிந்தது. இந்த இடைக்காலத்தில்தான் 1748-ம் ஆண்டு இராமநாதபுரம் நாட்டில், அருப்புக்கோட்டையிலிருந்து கிழக்கே 18 மைல் தூரத்திலுள்ள **முக்குளம்** என்ற கிராமத்தில், **ஆனந்தத்தாய்** என்னும் **பொன்னாத்தாளுக்கும், உடையார்சேர்வை** என்ற **மொக்கப் பழனியப்பசேர்வைக்கும்** திருமகனாகப் பிறந்தார் **பெரிய மருது பாண்டியர்**. முக்குளத்தில் அவர் பிறந்தாலும், தந்தையோடு இராமநாதபுரம் கொங்காரு தெருவிலேயே வசித்து வந்தார். தந்தை உடையார் சேர்வை, இராமநாதபுரம் சேதுபதி முத்து விஜயரகுநாதருக்கு தளபதியாக அமைந்தவர். பெரிய மருது பிறந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தவர் **சின்ன மருது பாண்டியர்**. இவர்களை இளம் வயதிலேயே விட்டுவிட்டு உடையார் சேர்வை இயற்கை எய்தினார். இராமநாதபுரத்தின் வலுமிக்க தளபதியாக விளங்கிய உடையார் சேர்வை இறந்ததும், அவரது வீரத்தை ஒருங்கே கொண்டு வளர்ந்த மருதிருவர் இராமநாதபுரம் மக்கள் கவனிக்கத் தக்க வகையிலிருந்தனர்.

சிவகெங்கை மன்னர் சசிவர்ணத்தேவர் காலமானதும், அவர் மகன் **முத்துவடுக பெரிய உடையணத்தேவர்** சிவகெங்கை மன்னரானார். இந்த நாட்களில் இராமநாதபுரம் சீமை மீண்டும் துளிர்விட்டது; ஆயினும் ஆங்கிலேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் கடற்பட்டினங்களைக் கொடுத்து ஒப்பந்தம் செய்து கொண்டது. உள்நாட்டு விரோதிகளைச் சமாளிக்க வெளிநாட்டு உதவி தேவைப்பட்டது.

எனினும் முத்துவடுகத்தவேரின் தலைமையின்கீழ் யாருக்கும் அடங்காமல் குன்றிலிட்ட விளக்காகச் சிவகெங்கைச் சீமை இருந்தது. ஆற்காட்டு நவாபின் கண்கள் சிவகெங்கைச் சீமையிலேயும், பாஞ்சாலங்குறிச்சியிலேயுமே இருந்தன. சசிவர்ணத் தேவரை விட அவரது மகன் முத்துவடுகத்தேவர் இணையற்ற வீரர். அவர் புலியைக் கொன்றவர்; என்றால் இவர் உருவில் பெரியயானையை வெல்லும் திறம் படைத்தவர். இவரது மனைவியாக வந்தவரே தென்பாண்டி மண்டலம் இன்றுவரை மறவாதிருக்கும் **இராணிவேலு நாச்சியார்** ஆவார். துணைக்கண்டம் முழுவதும் துள்ளி எழுந்த காலத்தில்தான், ஒரு ஜான்ஸிராணியை வடநாட்டினர் சந்திக்க முடிந்தது. பல்வேறு வகையான துணைகளோடு தான், ஒரு ஜான்ஸிராணி வீராங்கனையாக விளங்க முடிந்தது. ஆனால், தனிப்படநின்றுபோரிட்ட தையல் உலக வரலாற்றிலேயே இராணிவேலுநாச்சியார் ஒருவர் தான். கட்டழகன் முத்துவடுகத் தேவரின் சிலைகளையும், இராணி வேலுநாச்சியாரின் சிலைகளையும் மறவர்நாடு முழுவதிலும் இன்றும் காணலாம். அந்த மீசை அழகும், தொந்தி சரிந்திடக் கட்டியுள்ள வேட்டியும், விம்மிப் புடைத்து வேல்தாங்கி நிற்கும் தோள்களும், முன்வைத்த அடிகளைப் பின்வைக்கத் துணியாத வீரமும் இன்றும் முத்துவடுகத் தேவரின் சிலைகளில் பொங்கி வழிகின்றன. சேலையையே மேலாடையாக்கி, மானம் காக்கும் மறவர்குலதிலகம், வேலுலகமாது என்று மறவர்நாடு போற்றிப் புகழும் வேலுநாச்சியாரின் சிலைகள் இன்றும் நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன.

முத்துவடுகத்தேவர், வேலு நாச்சி, மருதிருவர் இந்த நால்வரையும் எதிர்ப்பதற்கு ஆற்காட்டு நவாப் துணிந்தானில்லை. பிற படையெடுப்புகளில் அவனுக்கு வராத துணை சிவகெங்கைச்சீமையின்மீது படையெடுப்பதற்குத் தேவைப்படும் என்று கருதினான். எந்த ஒரு பகுதியையாவது ஆங்கிலேயருக்கு விற்று, அவர்கள் துணையோடு சிவகெங்கைச் சீமையைக் கவர நினைத்தான். சென்னைக் கடலோரத்தில் ஆற்காட்டு நவாபின் முன்னோர் கொடுத்த இடம்தான் வெள்ளையர்கள் கோட்டை

அடுத்த இதழில்... !

**குரல்கெட்ட குயிலே கேள்!**

கண்ணதாசன்

எழுதும்

★ கவிதை ★

கட்டிக்கொண்ட இடமாகும். அவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதுகிற பணிகளை மேற்கொண்டிருந்தான் அந்நாளைய நவாப். நவாபுவின் மகன் உமாதுல் உமாரா அப்போது தஞ்சைப் பகுதிகளை வேட்டையாடிக்கொண்டிருந்தான். ஓரளவுக்கு சிவகெங்கைச் சீமை நவாபோடு சுமுக உறவுகொண்டிருந்தாலும், நவாபுவின் பேராசைப் பசி அடங்கவில்லை.

தஞ்சை வெற்றிக்குப்பின், நவாபுவின் மகன் உமாதுல் உமாரா ஆற்காட்டுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் அவனது ஆசைகளையெல்லாம் கொட்டியிருந்தான். சிவகெங்கை மறவர் மக்கள் அடங்காப்பிடாரிகளாக இருப்பதாகவும், தஞ்சைப்படையெடுப்பில் தனக்குப் பல தொல்லைகளை அவர்கள் கொடுத்ததாகவும், கிழவன்சேதுபதி காலத்திய தஞ்சைப் பகுதிகளை மீண்டும் கவர முயல்கிறார்கள் என்றும், தஞ்சை வெற்றியோடு வெற்றியாக சிவகெங்கையின் மீது பாய வேண்டுமென்றும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான். இந்த நாளிலெல்லாம் மறவர்நாடு என்பது சிவகெங்கைச் சீமையையே குறிப்பதாகிவிட்டது. இராமநாதபுரம் ஓரளவுக்கு ஓய்ந்துபோய்விட்டது.

மகனின் கடிதத்தைக் கண்ட ஆற்காட்டு நவாப், 1772-ம் ஆண்டு, மார்ச் திங்களில் கம்பெனி அரசாங்கத்துக்கு ஒரு ஓலை அனுப்பினான். அதில், சிவகெங்கையும், இராமநாதபுரமும் டச்சுக்காரர்களின் துணையோடு கம்பெனிமீது படையெடுக்க ஆயத்தம் செய்கின்றன என்றும், மேற்படி சீமைகளில் தன்னால் கப்பம் வசூலிக்க முடியவில்லை என்றும் சிறிதும் உண்மைக் கலப்பற்ற செய்திகள் அனைத்தையும் எழுதி கம்பெனியிடம் படை உதவி கேட்டான். அவன் எண்ணம் நிறைவேறியது. 1772- மே மாதம் ஜோசப் ஸ்மித் என்பானின் தலைமையில் கம்பெனிப் பட்டாளம் புறப்பட்டது. நவாபுவின் மகனும் உடன் சென்றான். புதுக்கோட்டைத் தொண்டைமான் பேருதவி புரிந்தான். சிறிதும் முன்னெச்சரிக்கையின்றி, காரணமின்றி இராமநாதபுரம் தாக்கப்பட்டது. எளிதில் இராமநாதபுரம் வீழ்ச்சியுற்றது.

இராமநாதபுரத்தை ஆண்ட ஒன்பது வயதுச் சிறுவனும், அவன் தாயும், சகோதரியும் கைது செய்யப்பட்டு திருச்சிக்கு அனுப்பப்பட்டனர்.

இராமநாதபுரத்தைப் போல் சிவகெங்கையையும் எளிதில் பிடித்துவிடலாம் என்றெண்ணிய நவாபுக் கம்பெனி, காளையார் கோயிலை நோக்கிப் பாய்ந்தது. அங்குதான் முத்துவடுகத்தேவரும், மருதுபாண்டியரும் வேட்டைக்காக வந்திருந்தனர். ஈட்டி, சமுகாடு, வேல், அலகு, எறிஈட்டி, சுண்டுவில், வளரிக்கம்பு இவையே அவர்களிடம் அப்போதிருந்த ஆயுதங்கள். மிகக் குறைவான படைகளையே அவர்கள் தங்களோடு அழைத்து வந்திருந்தார்கள். முத்துவடுகத்தேவர், தம் இரு மனைவிகளோடும் வந்தவர் மூத்தராணி வேலுநாச்சியாரை கொல்லங்குடி கிராமத்தில் இருக்க வைத்துவிட்டு, இளைய ராணியைமட்டும் அருகில் வைத்துக்கொண்டார். காளையார் கோயில், கோவில் மண்டபத்திலேயே இளையராணி தங்கியிருந்தார். போர் எண்ணமே இல்லாமல், அப்படி ஒரு சூழ்நிலை இருப்பதையே அறியாமல் மறுநாள் காளையார் கோயில் காட்டில் வேட்டையாடுவதற்கு மருதுபாண்டியரும், முத்துவடுகத்தேவரும் படை வீரர்களோடு தயாராயிருந்தனர்.

இதே நேரத்தில், நவாபு கம்பெனி கூட்டுப் பட்டாளம் மறவர்மங்கலத்தில் வந்து முகாமடித்தது. இதனை காளையார்கோயிலிலேயே முகாமடித்தனர். இரவோடிரவாகக் காளையார்கோயிலுக்குப் போன கூட்டுப் பட்டாளம், போருக்குரிய ஒலி முழக்கம் ஏதுமின்றி திருட்டுத்தனமாக காளையார்கோயிலில் கோட்டையாகவும் பயன்பட்ட கோவிலின் மீது ஏறிற்று. அங்கே, முத்துவடுகத்தேவரும் இளையராணியும் ஒரு மண்டபத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். சுவற்றின்மீது நின்ற நான்கு எதிரிகள் ஆகாயத்தை நோக்கிச் சுட்டார்கள். முத்துவடுகரும், இளையராணியும் திடுக்கிட்டெழுந்து நடப்பதை அறியகோவிலை விட்டு வெளியே வந்தனர். தூக்கக் கலக்கத்திலிருந்த கண்களைத் துடைத்துக்கொள்ளு முன்பே, ஒரு வெள்ளையன் அவர்களை பீரங்கியால் சுட்டான். முதல் அடியில் இளையராணி உயிர் துறந்தார். இரண்டாவது அடியில் முத்துவடுகேந்திரர் குற்றுயிராக விழுந்தார். போர் நெறியறியாப் புல்லர் கூட்டம், மானங்கெட்ட நவாபுக் கும்பல் மாவீரன் முத்துவடுகத்தேவரை காளையார்கோயில் மண்ணிலே புரள வைத்தது. சுந்தரபாண்டியனால் கட்டப்பட்ட கோபுரத்தின் அரு

## வெண்பாப் போட்டி-28.

ஈற்றடி :

பத்தரையும் சித்தரையும் பார்.

முடிவு தேதி 18-10-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

லிருக்கும் முத்துவடுகருக்குத் தெரிவிக்க ஒரு மறவர் மகன் இரவோடிரவாகச் சென்றான். சென்றவன், மருதிருவரை முதலில் சந்தித்துச் சேதியைச் சொன்னான். மருதிருவர்துடித்து, முத்துவடுகத்தேவரிடம் இதைத் தெரிவித்துவிட்டு அவரையும், இளையராணியையும் காளையார் கோயிலில் இருக்க வைத்துவிட்டு, காவலாக இரண்டாயிரம் பேரையும் நிறுத்தி பன்னீராயிரம் வீரர்களை அழைத்துக்கொண்டு, கூட்டுப் பட்டாளத்தை மறவர் மங்கலத்திலேயே சாய்ப்பதற்குப் புறப்பட்டார்கள். கூட்டுப் பட்டாளம் பீரங்கிகளைப் பிரயோகித்தது. மருதிருவர் படை வளரிக் கம்புகளை எறிந்தே பல பேரைக் கொன்றது. கர்னல் நீல் என்பானின் தலையை சின்ன மருதுவின் வளரி தனியாகத் துண்டித்துத் தரையில் போட்டது. கர்னாடக வீரர்களும் மருதுவின் படையிலிருந்தார்கள். மார்ட்டின் என்ற தளபதியும் இன்னொருவனும் மருதிருவரை எதிர்ப்பது எளிதல்ல என உணர்ந்து பெரும் பகுதி வீரர்களைப் பின்புறமாகக் கூட்டிக்கொண்டு, காளையார்கோயிலை நோக்கிப் பறந்தனர். இதனை அறியாத மருதிருவர் சிறுபகுதிப் படைகளையே குறி வைத்துக்கொண்டு, மறவர்மங்கலத்தில், முத்துவடுகநாதத்தேவர் உயிர் துறந்தார். அறுநூறுக்கு மேற்பட்ட மறவர் மக்கள் தூக்கக் கலக்கத்தோடு கொல்லப்பட்டனர். நவாபுவின் நாய்களும், வெள்ளைத் தலைகளும் முத்துவடுகத்தேவரின் மரணத்துக்கு மகிழ்ச்சி கொண்டாடின. கர்னல் மார்ட்டின் கோபுரத்திலே கொடி போட்டான்.

கானப்பேரெயில்-ஆம், இரண்டாயிரம் ஆண்டுகளாக காளையார்கோயில் இந்தப் பெயரோடு விளங்கிய கோட்டையாகத் தானிருந்தது. எத்தனையோ வீரர்களின் பிணங்களைத் தாங்கியிருக்கிறது. ஆனால், இப்போது முத்துவடுகத்தேவரின் பிணத்தை அது கண்ணீரோடு சுமந்தது; எதிரிகளைக் கவலையோடு தாங்கிக்கொண்டது.

மங்கலத்திலேயிருந்து மருதுபாண்டியரும் படைகளும், முத்துவடுகேந்திரரும் இளையராணியும் கொல்லப்பட்ட சேதியை அறிந்தனர். முகத்தில் அறைந்துகொண்டு அழுதனர். மூத்தராணிவேலுநாச்சியாருக்குத் தெரிவிக்க கொல்லங்குடிக்கு விரைந்தனர்.

மருதிருவர் கொல்லங்குடிக்கு வந்து சேரும்வரை இராணி வேலுநாச்சியாருக்குச் செய்தி எட்டவில்லை. மருதுபாண்டியரை இராணியார் முகமலர்ச்சியோடு வரவேற்றார். அழுது சிவந்த கண்களோடு பெரிய மருதுபாண்டியர் தேவர் மகன் தேவர் செல்லாக்காசு நவாபுவின் படைகளால் கொல்லப்பட்ட செய்தியைச் சொன்னார். இராணியின் துயரம் எல்லை கடந்தது. ‘கணவனும், தங்கையும் மாண்டார்கள். இனி நான் உயிர்தரியேன். சிதையை மூட்டுங்கள்; அவரோடு மாண்டுவிடுகிறேன்’ என்றழுதார் இராணியார். தேவியின் திருவடிகளிலே தாழ்ந்து ‘தாயே, நாங்கள் இரண்டு பிள்ளைகள் இருக்கிறோம்; எங்களைத் தவிக்கவிட்டு நீங்கள் இறக்க வேண்டாம். உங்களால் சிவகெங்கைச் சீமைக்கு ஆகவேண்டியவை அனேகம். விரைவில் சிவகெங்கைச் சீமையை நாங்கள் மீட்டுத் தருகிறோம். வீரத்தின் உறைவிடமான நீங்கள் மடிய நினைப்பது சரியல்ல’ என்றார் பெரிய மருது பாண்டியர்.

அன்னை வேலுநாச்சியார் ஒருவாறு மனந்தேறி மருதிருவர் காட்டிய வழியை ஏற்றுக்கொண்டார். தண்டிகையில் ஏறிக்கொண்டு, மருதிருவரும் வேலுநாச்சியும் திண்டுக்கல்லை நோக்கிச் சென்றார்கள். அன்று இரவு திருப்பத்தூரிலிருந்து மதுரை போகும் வழியிலுள்ள மேலூரில் வந்து இறங்கினார்கள். மேலூர் மக்கள் அவர்களுக்கு நல்லதோர் வரவேற்பளித்து கௌரவித்தார்கள். தண்டிகை சுமக்கவும் ஆள் கொடுத்தார்கள். மீண்டும் சிவகெங்கைச் சீமையைக் கைப்பற்றும் முயற்சியில் வீட்டுக்கொரு பிள்ளை கொடுப்பதாக வாக்களித்தார்கள்.

அங்கிருந்து மறுநாள் காலையில் வேலுநாச்சியும், மருதிருவரும் புறப்பட்டு ஆற்றங்கரை வழியாக மேட்டுப்பட்டி என்னும் கிராமத்துக்கு வந்தார்கள். அங்கிருந்த ஒரு விடுதியிலே தங்கினார்கள்.

அப்போது திண்டுக்கல் பகுதி கர்னாடக மாவீரன் ஐதர் அலியின் வசத்திலே இருந்தது. ஐதர்அலி திண்டுக்கல் கோட்டையில் தங்கியிருந்தான். அவனுக்கு உற்ற நண்பனாக அருகிலிருந்தவன் அரிஹர அண்ணாவையன் என்பவன். அவன் மருதிருவரை மேட்டுப்பட்டியில் வந்து சந்தித்தான். விபரங்களை அறிந்துகொண்டு, ஐதர் அலியிடம் கூட்டிக்கொண்டு போனான். மருதிருவரைப் பார்த்த ஐதர், மனங்கனிந்து மாதம் இருநூறு பொன் படியும், விளாம்படம் நகரிலே விடுதியும், சில வீரர்களையும் அவர்களுக்குக் கொடுத்தான். மருதிருவரும், இராணி வேலுநாச்சியாரும் விளாம்படம் விடுதியிலே தங்கினார்கள்.

**- தொடரும் -**

முகவரி மாற்றம் :

என். வி. நடராசன்,
‘திராவிடன்’
16/17, திருநாவுக்கரசு
முதலி தெரு,
பெரம்பூர்,
சென்னை-11.

அடுத்த இதழில்

**சிவகெங்கை மீட்சி;**

**மருதிருவர் ஆட்சி**

உருவகம் :

# கடலும் மேகமும்

வானவீதியில் வித விதமான கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்த மேகத்தைப் பார்த்து கடலானது தன் அலைக்கரங்களை நீட்டி, 'குழந்தாய், எனக்கு எட்டாத மேலிடத்திலிருந்துகொண்டு என்னை ஏன் இப்படி வாட்டுகிறாய். நீ எட்டிச் செல்லச் செல்ல என் மனம் படும் வேதனை எவ்வளவு தெரியுமா? தாயினுடைய வாழ்க்கையில் இன்பத்தின் எல்லையே தன் குழந்தையின் அரவணைப்பில்தான் இருக்கிறது. தண்ணிய நிலவுபோன்ற என் உடல் தகிக்கும் தகிப்பை நான்தான் அறிவேன். உன்னைப் பிறப்பிக்க நான் எவ்வளவு பாடுபட்டிருக்கிறேன் தெரியுமா? என் உடலின் ஒவ்வொரு அணுவையும் உனக்காகத் தத்தம் செய்து, உடலில் வியர்க்கும் வியர்வைத் துளிகளை ஆவியாக்கி உன்னை உருவாக்கியிருக்கிறேன். ஆனால் நீயோ, அதையெல்லாம் கருதாது, தாயென்றும் பாராது என்னை மறந்து வானவீதியிலே பறக்க ஆரம்பித்துவிட்டாய். மகவே! வந்துவிடு! என்மீது உன் அன்பாகிய மழையம்புகளைப் பாய்ச்சு. என் உடல்குளிர உள்ளம்குளிர வீசு' என்று வேண்டியது.

மேகமோ; 'நீயா எனக்குத் தாய்? யாரிடத்திலாவது சொல் நம்புகிறார்களா பார்ப்போம்! உனக்கும் எனக்கும் எத்தனை வேற்றுமை? உன் ஆசையைத்தான் ஏன் கெடுப்பானேன்? தாயே! என்னை உலகத்தில் பிறப்பித்ததற்கு நன்றி. ஆனால்... எண்ணிப் பார்! நானோ வானத்தில் இருக்கிறேன். நீயோ பூமியின் வெட்டுப்பள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கின்றாய். நானோ இங்கே வித விதமான நட்சத்திர மலர்களோடு விளையாடப் போகிறேன். நீயோ வரண்ட பூமியைச் சுற்றிச் சூழ்ந்து கிடக்கின்றாய். நானோ வான ஊர்திபோல ஆகாய வீதியிலே பவனி வந்து நாடு நகரமெல்லாம், காடு மலையெல்லாம் காணாத காட்சியெல்லாம் காணப்போகிறேன். நீயோ கிடந்த இடத்திலே கிடந்து புரண்டு புரண்டு, கத்திக் கத்தி வேறு வகையற்று விதியே என்று இருக்கப்போகிறாய். அது மட்டுமா? இங்கு தென்றல் என்னைத் தாலாட்டுகிறது. வெண்ணிலா வேறு, பொன்னைச் சொரியும் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் எண்ணிப் பார்! கடல் மாதாவே! உன்னிடத்திலே வந்தால் இதெல்லாம் கிடைக்குமா? கிடைக்காதது மட்டுமல்ல; நினைக்கவே என் மனம் குமைகிறது. வயிறு குமட்டுகிறது. உன்னிடத்தில் என்ன இருக்கிறது? உப்பு... உப்பு! ஒரே கரிப்பு–இதைத் தவிர' என்றது.

கடல் அதற்கு பதில் கூற ஆரம்பித்து 'நீ என்னிடத்தில் வந்தால் நான் உனக்கு...' என்று தொடங்கியது. மேகமோ கடலின் பதிலைக் கேட்பதற்குத் தயாராய் இல்லை. இருந்தால் மேலும் தொல்லை. இப்படியே கடல் உரிமை கொண்டாடி பாசவலை வீசி நம்மை தன்புறம் இழுத்துவிடும். பிறகு தன்னுடைய எண்ணக் கனவுகள் எல்லாம் நினைவுகள் ஆகாமலேயே கரைந்து மறைந்துவிடும் என்று எண்ணியபடியே, 'விர்...' என்று வேகமாக மேலும் மேலேறிப் பறந்து விட்டது. தன் போதனைக்கு அடங்காத பிள்ளையைத் தாய் என்ன செய்ய முடியும்? கடல் வேறு வகையற்றுக்கிடந்தது.

மேகம் மேலும் மேலும் பறந்தது. எங்கும் புதிய காட்சிகள். இதுவரையிலும் காணாத காட்சிகள். மேகத்திற்கு தன் நினைவே இல்லை. மது குடித்த வண்டாகப் பறந்துகொண்டிருந்தது. அதன் உள்ளம், 'ஆகா... ஆகா...' என்று கும்மாளமிட்டது. 'சுவர்க்கமே இதோ' என்றுகூட அதன் வாய் முணுமுணுக்க ஆரம்பித்தது.

திடீரென்று எதிர்பாராத அடி. தன்னை யாரோ சம்மட்டி கொண்டு தாக்குவது போன்று பட்டது மேகத்திற்கு. விழித்து நிமிர்ந்து பார்த்தது. தன் எதிரே வானத்திற்கும் பூமிக்கும் அணை கட்டியது போன்ற மலைக்கூட்டங்கள்.

மேகத்திற்கு ஒரே ஆத்திரம். 'நான் எவ்வளவு இன்பமாக வானவீதியில் பவனி வருகிறேன். இந்நிலையில் என்னைத் தாக்குகிறாயே' என்றது.

மலை மெல்லச் சிரித்து, 'நானா உன்னைத் தாக்குகிறேன். என்னை நீயல்லவா வந்ததும் வராததுமாகத் தாக்கினாய்' என்றது மேகம். 'சரி சரி, வழியை விடு' என்று மேலும் வேகமாகப் பறந்தது. மேலும் ஒரு அடி. அவ்வளவுதான், மலையின்மேல் ஒரு சிகரத்தில் மோதிக் கொண்டது. மலை சிரிக்க; மேகம் பொல பொலவென்று உதிர்ந்தது மழைத்துளியாக. என்ன செய்வது? 'ஐயோ...நான்...நான்' என்றது. அதற்குள் துளிகள் எல்லாம் ஒன்று கூடி வெள்ளமாக ஓட ஆரம்பித்துவிட்டன. ஓடி வரும்வழியில் எத்தனை அடி, உதை? எத்தனை வீழ்ச்சி? இத்தனையும் தாங்கிக்கொண்டு 'என் உருமாறி விட்டதே' என்று கத்திக்கொண்டு நிற்கவும் மாட்டாமல் நிலைக்கவும் மாட்டாமல் ஓடிக்கொண்டே இருந்தது.

வெள்ளமாகிவிட்ட மேகத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. பல நாட்கள் உருண்டு புரண்டு சென்றுகொண்டு இருந்ததால் ஒரே மயக்கம் வேறு. இறுதியில் எப்படியோ நடப்பது நடக்கட்டும் என்று கண்ணை மூடிக்கொண்டு சென்றுகொண்டிருந்தது.

'குழந்தாய்...குழந்தாய்...'–தன்னை யாரோ அன்போடு அழைப்பது போன்று பட்டது வெள்ளமாகிய மேகத்திற்கு. மெல்லக் கண்ணைத் திறந்து பார்த்தது. எதிரே கடல். 'ஐயோ அம்மா' என்று கத்தியே விட்டது.

'இப்படியாகும் என்று தெரிந்திருந்தால் நான் போயே இருக்க மாட்டேன் அம்மா!' என்று மேகக்குழந்தை உருக்கமோடு கதறியது.

தாயாகிய கடலோ வெள்ளமாகிய மேகக்குழந்தைப் பார்த்து மென்னகை புரிந்தவாறே, 'எப்படியோ வந்து சேர்ந்துவிட்டாயே' என்று அன்போடு அரவணைத்துக் கொண்டது.

–கரந்தை. கணேசன்

இலங்கைத் தமிழன் கடிதம்

# தென்னிலங்கைச் செய்தி தெரியுமா தென்றலே!

தென்னக மண்ணில் வாழும்
தென்றலே! அன்பின் நங்காய்!
உன்னரும் அத்தான் நீட்டும்
ஓலையைக் காண்பாய்! ஈழ
மண்ணிதில் ஓடும்(இ) ரத்த
மையினல் வரையும் அஞ்சல்
செந்நிறம் காட்டும்! உந்தன்
செவ்விதழ் அழகே காட்டும்!

எழுத்தினில் வரைய ஒண்ணு
இலக்கியம் கண்ணே! இங்கு
உலுத்தர்கள் ஆட்சி! எங்கள்
உரிமைகள் யாவும் கொள்ளை!
குழைத்த தேன்மொழியும் இல்லை!
குவலயம் போற்றும் தூய
விழித்தமிழ் தேய்த்தார்! இன்று
வீதியிற் குருடர் ஆனேம்!

புத்தனின் வழியில் மஞ்சள்
போர்வையில் திரிவோ ரெல்லாம்
கத்தியில் தமிழன் ரத்தக்
கறைபடில் களிக்கின்றார்கள்!
சத்தியம் எடுக்கின் றார்கள்
சாயுமாம் தமிழன் மேனி!
முத்தமிழ்த் தேனே! சொந்த
முடியிலா அவலம் பாராய்!

உரிமையைக் கேட்டார் நெஞ்சில்
உரமுள தமிழர்! மானச்
சரிதையைக் காப்போம் என்று
சாற்றினர்! அதுதான் குற்றம்!
வெருளுடன் எழுந்தார் ஆளும்
வீணர்கள் முதல்வர்! தூய
அருமையின் தலைவர் தம்மை
அடைத்தனர்! வீட்டில் வைத்தார்!

அடைத்தனர் சுடரை! அன்னர்
அனுப்பிய பட்டா ளத்தார்
உடைத்தனர் கதவை! ஓங்கி
உதைத்தனர் தமிழன் நெஞ்சில்!
படைத்திறம் காட்டும் வண்ணம்
பாவையர் குழுவை முண்டிக்
குடித்தனர் கற்பை! அந்தோ!
குப்பையில் தமிழன் மானம்!

வீடெலாம் தீ! தீ! நம்மோர்
வியர்வை நீர் அனைத்தும் கொள்ளை!
காடெலாந் தமிழர் கூட்டம்!
கரடியின் குகையே இல்லம்!
ஓடுமாம் குருதிக் கங்கை
உன்மலை இனத்தான் ஊற்று!
ஆடுமோர் தொட்டிற் சேய்க்கு
அன்னையும் பிதாவும் இல்லை!

மானமே பெரிதென் றெண்ணும்
மங்கையள் கிணற்றில் பாய்ந்தாள்!
வானிலே காடைக் கூட்டம்
வளர்த்த தீ, தமிழன் தங்க
மேனியை அணைத்த காலை
மிதந்த பொற் சாம்பல்எல்லாம்
காணடி! உனது நாட்டுக்
காற்றொடு கலந்தே வாழும்!

சிறுமியள் ஒருத்தி! பூத்துச்
சிரித்திடா மொட்டு! அன்னள்
முறுவலின் உடலைக் கூடி
மோதினர் இரக்கம் இல்லாத்
தறுதலைக் கூட்டம்! பத்துத்
தடியர்கள்! என்னுஞ் சேதி
அறிகுவாய் அன்பே! நீயும்
அவளுந்தான் தமிழர் செல்வி!

சொட்டுக ளாகக் கண்ணீர்
சொரியுது கண்ணே! எம்மைச
சுற்றிலும் எஃகுக் காவல்!
சுதந்திரம் ஏதும் இல்லை!
எட்டெனும் திசையும் கீர்த்தி
இருத்திய ராவ ணன்சேய்ச்
சுற்றமும் மொழியும் இங்கு
சூரியினும் இழிவா யிற்றே...!

பேரிகை கொட்டும் ஆழி
பிரித்ததால் வந்த துன்பம்
கூறினேன் நங்காய்! இந்தக்
கூற்றினைத் தமிழ மண்ணின்
ஊரெலாம் பரப்பு! ஓடி
உறங்குவார் காம ராசர்!
சேரரும் சோழ பாண்டிச்
சீலரும் எழுவார் இன்றே!

—கா. சி. ஆனந்தன்

★ ★ ★

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

வற்புறுத்தலால் கிளம்ப வேண்டியதாயிற்று.

மதுரையில் அவனுடைய சித்தப்பா ஒருவர் நல்ல நிலைமையில் இருந்தார். அவரிடம் போய் ஆறுமாதம் இருந்துவிட்டு வருவது; பிறகு அவரைக் கொண்டே சிவகாமியைக் கேட்கச் சொல்வது என்று திட்டமிட்டுக்கொண்டு ராஜாமணி வண்டி ஏறினன்.

சித்தப்பா வீட்டில் நான்கு மாதங்கள் ஓடிவிட்ட பின்னர்தான், செல்லையாவிடமிருந்து கடிதம் வந்தது.

சிவகாமிக்குக் கல்யாணமாம்! யாரோ பெரிய இடத்து மாப்பிள்ளையாம்; சிவகாமிக்கும் மாப்பிள்ளையை மிகவும் பிடித்திருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறார்களாம்!

ராஜாமணி கொதித்தான். அவளுக்காக அவன் அனுபவித்த தொல்லைகளெல்லாம் அவன்முன் வந்து நின்று கேலி செய்தன. எவ்வளவோ சமாதானம் செய்து பார்த்தும் அவள் மீது அவனுக்கு ஏற்பட்ட கோபத்தை அடக்கவே முடியவில்லை. கடைசியில் தன்னை ஏமாற்றிவிட்ட அவளை எப்படியும் தீர்த்துக் கட்டிவிடுவது என்று முடிவு செய்துகொண்டு அவன் புறப்பட்டு விட்டான்.

அவனோடு ஆசைவெறியில் பேசிய அந்த வாய்...அவனையே பார்த்துச் சுழன்ற அந்தக் கண்கள்...அவனை இறுக அணைத்த அந்தக் கரங்கள்... முடியாது! அவனுடைய அந்த இடத்தை வேறு எவனும் பிடித்துக் கொள்வதை அவனுல் சகிக்கமுடியாது!

★

வண்டி கடையநல்லூர் ஸ்டேஷனில் வந்து நின்றது.

அவசர அவசரமாக டிக்கட்டைக் கொடுத்துவிட்டு வெளியே வந்த ராஜாமணி, எதிரில் வந்துகொண்டிருந்த செல்லையாவைக் கண்டு திடுக்கிட்டான். இவன் ஏன் இந்த நேரத்தில் இங்கே வருகிறான்?

'செல்லையா! ஏய், செல்லையா!'

'யார்...? ராஜாமணியா?...அட... இந்த வண்டிக்குத்தான் வர்ரியா? ஆமா, தனியாகவா வந்தே? இல்லை, அவளும்கூட வந்திருக்காளா?...'

'அவளா?...நீ என்ன சொல்றே, செல்லையா?'

'என்ன சொல்றயா! நான் உனக்குக் கடுதாசி எழுதினேனில்ல... அன்னைக்கு உன் விலாசத்தைக் கேட்டனுப்பிச்சா சிவகாமி. அப்புறம் திடீர்'னு ஆளே காணுமல்போயிட்டா. உன்னைத் தேடித்தான் வந்திருக்கணும். பின்னே எப்படி நீ தனியா வந்தே?...'

ராஜாமணி பதில் ஏதும் பேசவில்லை!

★

மதுரை எழுத்தாளர் மன்ற

# கவியரங்கில்...

## கண்ணதாசன்

### முன்னுரை

கதிர்வெடித்துப் பிழம்புவிழக் கடல்குதித்துச் சூடாற்ற
முதுமைமிகு நிலப்பரப்பின் முதற்பிறப்புத் தோன்றிவிட
நதிவருமுன் மணல்தருமுன் நலம்வளர்த்த தமிழணங்கே
பதிமதுரைப் பெருவெளியில் பாண்டியர்கை பார்த்தவளே !

நின்னையான் வணங்குவதும் நீ என்னை வாழ்த்துவதும்
அன்னை மகற்கிடையே அழகில்லை என்பதனால்
உன்னை வளர்த்துவரும் ஒண்புகழ்சேர் தென்புலவர்
தன்னை வணங்குகிறேன் தமிழ்ப்புலவீர் நீர்வாழி !

கருத்தழியச் சொல்தேய கடுநோயில் தமிழ்வாட
பொறுத்தருளும் பண்புடைய புலவர்களால் நோய்பெருக
வருத்திவரும் உயிர்க்கொல்லி வடமொழியே என்றார்ந்த
மருத்துவரே மாராச மாணிக்கப் பெரும்புலவீர் !

கொன்றப் புலிவாயின் கொடும்புலியின் மாலையுடன்
நின்றக் குடியெல்லாம் நிழல்போலத் தேய்ந்தாலும்
இன்றக் குடிவழியில் இயற்றமிழின் முறையார்ந்த
குன்றக் குடிப்பெரியீர் குமரனுக்கும் தமிழ்தருவீர் !

செட்டி தமிழுலகில் திறமாகக் கண்டதெலாம்
வட்டி எனநிலவும் வன்சொல்லை நீக்கி,வளங்
கொட்டிப் பிறந்த குடிப்பிறந்த தமிழ்கற்றுத்
தொட்டில்போற் கல்லூரி துலக்குமணி வாசகனே !

யார்வல்லீர் என்றெழுந்து ஆர்த்தசிவன் கேட்டாலும்
நாம்வல்லோம் என்றுவரும் நக்கீரன் வழிவழியில்
சீர்வல்ல பாண்டியனின் திறம்வல்ல பேரேற்ற
நாவல்ல என்தோழ ! நலம்வல்ல நெடுஞ்செழிய !

எடுத்தாள நாடொன்று இல்லாத காரணத்தால்
எழுத்தாள ரானவரே ! எமையாளும் காவலரே !
கொடுத்தாளக் குவிந்துள்ள கொஞ்சுதமிழ்ப் பாவலரே !
அடுத்தார்க்கு அஞ்சலெனும் அருமதுரைப் பொதுமக்காள் !

பூவாடு மென்று புறமொதுக்கி முத்தமிடும்
மூவாத முல்லை முறுவலினர் காதலிலே
பாவாட விட்ட பாண்டியனர் பொன்னாட்டில்
நாவாடத் துணிகின்ற நாயேனை மன்னிப்பீர் !

...

கூடல் எனமுன்னோர் குறிப்பிட்ட நன்நகரில்
கூடியுள்ளோம் இன்றுநாம் கூடலுக்கும் பொருள்தந்தோம்
வாடும் புலவோர்கள் மன்னர்மணி மண்டபத்தே
கூடலால் இந்நகரைக் கூடலெனச் சொன்னாரோ ?

வாடல் துளியின்றி மலர்க்காட்டில் காதல்செய்து
ஊடல் புரிந்து உளம்மகிழ்ந்து நற்பொழுதில்
கூடும் குலமாதர் குணமறிந்து வைத்தாரோ ?
பாடும் தமிழைப் பயில்கின்ற வைகைநதி
கூடிக் குளிக்கவரும் கோதையர்கள் மேனியினைக்
கூடலால் சொன்னாரோ ? கொற்றவர்கள் வீதியிலே
சீனத்துப் பட்டும் சிங்களத்துத் தேக்குகளும்
கானக் கருவிகளும் கடல்வயிற்று மாமணியும்
தஞ்சைப் பயிர்வகையின் தானியமும், ரோமர்களின்
குத்தீட்டி கத்திகளும் கொல்லத்துச் சர்க்கரையும்
அரபுக் குதிரைகளும் யானைகளும் விற்பனைக்குக்
கூடியதால் இந்நகரே கூடல்என் றார்த்தாரோ ?
இல்லை தமிழ்ப்பெரியீர், இல்லை ! நா மெல்லோரும்
இன்றுவந்து கூடிடுவோம் என்பதனால் கூடலென்றார் !
சேரத்தான் தலைநகரை வஞ்சியெனச் செப்பியவர்
தெரியாமல் சொன்னாரோ ? திரையெடுத்த போர்ப்புயலில்
ஆடவர்கள் எல்லோரும் அழிந்ததனால் பொன்போலும்
எழிலான பாவையரே எங்கும் நிறைந்ததனால்

வஞ்சியரே வாழ்ந்த மன்னன் தலைநகரை
வஞ்சிஎன உரைத்தாரோ ? மனவிருந்து வைத்தாரோ ?
உறையும் இடமின்றி ஓடிவரும் கதியற்றோர்
உறைவதற்கு இடந்தந்த உறையூரோ சோழநகர்
தஞ்சங் கொடுத்தழிந்த தன்மையினால் ஒருநகரம்
தஞ்சைஎனப் பெயரிற்றோ ? தாயின் வயிற்றிருக்கும்
கருவும் பகையறுக்கும் களவலியால் ஒருநகரம்
கருவூராய் ஆனதுவோ ? கல்லெழுத்தாய் நின்றதுவோ ?

சொற்கள் அனைத்தும் பொருள்குறிக்கும் எனமுன்னோர்
சொன்னதுதான் பொய்யோ ? தூய தமிழ்மொழியில்
பூவைப்போல் பெண்ணென்றே பூவைஇவள் என்றுரைத்தார்
பாவை வளர்த்ததனால் பாவைஇவள் எனப்பகன்றார் !
மையலுக்கும் மானிடர்க்கும் மைவிழியாம் ஊசியினால்
தையல்போட் டாள்தம்மைத் தையல் எனக்குறித்தார் !
கலக்கும் இருள்விரட்டி விளக்கும் ஒளிப்பொருளை
விளக்கென்றார் ! காதல் விளங்கவரும் புதியவர்கள்
பயிலாத வித்தைக்குப் பள்ளியாய் அமைந்ததனால்
படுக்கையினைப் பள்ளியெனப் பக்குவமாய்ச் சொல்லிவைத்தார்
சமாதி என்பதனை மாலையீ டெனஉணர்த்தும்
தமிழ்வார்த்தை உண்டென்று என்தமிழர் அறியாரோ ?
இழப்பதனால் சாவை இழவென்றார் ! மணம்போல
இழைவதனால் திருமணமென் றெழிலான சொல்வடித்தார்.

எழுத்தடுக்கிச் சொல்லும் சொல்லடுக்கி வார்த்தைகளும்
வார்த்தைவழிப் பொருளோடு வாக்கியமும், வாக்கியத்தில்
ஆக்கியதோர் இலக்கியமும் அழகுசெயும் இலக்கணமும்
வகுத்த தமிழ்நிலமே ! வந்தவரை வாழ்த்தியதால்
அழிந்த பெருநிலமே ! அண்ணனொடு தம்பியரும்
நிறைந்த தனிவாழ்க்கை நேராமல் மாற்றாரின்
காலடியில் வீழும் காலத்தை மாற்றிவிடப்
பாண்டியனர் சந்நிதியில் கூடியுள்ள பாவலரே !
மறவர் திருநாட்டில் மண்ணெல்லாம் சிவப்பாகக்
காண்பதனை எண்ணிக் கருத்தறிய முயன்றீரா ?
செங்குருதி வீழ்ந்து செந்நிறமாய் ஆனதொரு
காரணந்தான் என்றாலும் கடல்கடந்த தமிழ்மாந்தர்
எழுதுகின்ற ஓலை எழுத்திலுள்ள குருதியெல்லாம்
வீழ்ந்து சிவந்ததுதான் மிகப்பெரிய காரணமாம் !
ஆமாம், தமிழ்ப்பெரியீர் ! அருட்பாண்டி நன்னாட்டில்
தண்ணீர் பழுப்புநிறம் ! தரையெல்லாம் சிவப்புநிறம்
கண்ணிறைந்த மக்கள் மனமெல்லாம் வெள்ளைநிறம்
மண்வாழ மழைபொழியும் மேகந்தான் கருப்புநிறம் !
மறவர்குல வீரர்களின் திருவுள்ளம் பசுமையென்பேன் !
இத்தகைய நாட்டில் இன்றுநாம் எல்லோரும்
ஏற்பதொரு சபதம் ! "என்தமிழை அழிப்பாரை
துண்டாக வெட்டித் துகளாக்கி உரமாக்கி
வண்டாடும் பூமலர வைப்போம்நாம்" என்பதுதான் !

அன்புப் பெரியீர் ! உம் அடிவணங்கி முன்னுரையை
அணைக்கின்றேன் ! தமிழ்வாழ்க ! அன்னை வாழ்க !



# மதுரைத் திருவிழா

★ ப. புகழேந்தி ★

மதுரை எழுத்தாளர் மன்றத்தின் முதலாவது ஆண்டு விழா, மிகச் சீரும் சிறப்புமாக 28-9-'58 ஞாயிறு அன்று காலை 9 மணி அளவில் நடைபெற்றது.

பழனி டாக்கீசில் நடைபெற்ற அந்த விழாவுக்கு, நுழைவுக் கட்டணம் செலுத்தி ஏராளமான பொது மக்கள் குழுமியிருந்தது, மதுரை நகர் கண்டிராத புதுமையாக இருந்தது.

விழாவுக்கு மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவரும், எழுத்தாளர் மன்றத் தலைவருமான டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தலைமைவகித்தார்கள்.

திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்து அரியதோர் உரை நிகழ்த்தினர்கள்.


தலைவர் உரையும் சரி, துவக்க உரையும் சரி மிக அற்புதமாகத் திகழ்ந்தன. அந்த உரைகளில் தமிழும், தமிழரும் இன்றுள்ள இழி நிலையும், எதிர் காலத்தில் பெற வேண்டிய ஏற்றமும் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டன. அந்த இரு பெரும் தமிழுருவினரும் தங்களின் கரைகாணமுடியாத மொழிப் பற்றை தம் சொற்பொழிவு நெடுகிலும் தவழவிட்டனர்.

பின்னர் 'தமிழ்நாடு' நாளிதழ் நிருவாக ஆசிரியர் திரு. கருமுத்து தி. மாணிக்கவாசகம் அவர்கள், மன்றத் தலைவராக இருந்த, காலஞ்சென்ற பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனார் அவர்களின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்து அவர்களின் பணி குறித்துப் புகழ்ந்து பேசினர்கள்.

அடுத்து சிறந்த கையெழுத்துப் பத்திரிகைகள் மூன்றிற்குப்பரிசுகள் வழங்கப்பட்டன. பேராசிரியை திருமதி தே. தியாகராசன் அவர்கள் பரிசுகளை வழங்கினர்கள். கையெழுத்துப் பத்திரிகை நடத்துவது ஒரு தனிக்கலை. அதனைச் சிறப்புறச் செய்து முடித்த அவர்கள் பாராட்டுக்குரியவர்கள் அல்லவா!

தொடர்ந்து, அலை ஒலிபோன்ற நீண்ட கைதட்டல்களுக்குப்பின், நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பேச எழுந்தார்கள்.

'எழுத்தாளர்களும், தமிழ் வளர்ச்சியும்' எனும் பொருள்பற்றிப் பேசிய அவர், மொழி வளர்ச்சியில் எழுத்தாளர்களின் பங்கு என்ன என்பதுபற்றியும், எழுத்தாளர்களின் அரிய முயற்சியால் வளர்ந்திருக்கும் நாடுகள்பற்றியும், இன்றைய தமிழ் எழுத்தாளரின் தலையாய கடமைபற்றியும் தெளிவுபட விளக்கினர்.



கலந்துகொண்ட கவிஞர்களும் சொற்பொழிவாளர்களும்.

பின்னர், 'எழுதப்படுபவற்றிலெல்லாம் தனித் தமிழே கையாளப்பட வேண்டும்' என்பனபோன்ற முக்கியமான தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

இறுதியாக, கவியரங்கம் துவங்கியது.

'தென்றல்' ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் கவியரங்கத்துக்குத் தலைமை வகித்தார்கள்.

தலைவர் முன்னுரையும் கவிதையிலேயே நிகழ்த்தப்பட்டது.

முன்னுரைக் கவிதையில்,

'வாடல் துளியின்றி
மலர்க்காட்டில் காதல்செய்து
ஊடல் புரிந்து
உளம்மகிழ்ந்து நற்பொழுதில்
கூடும் குலமாதர்
குணமறிந்து வைத்தாரோ?'

'மையலுக்கும் மானிடர்க்கும்
மைவிழியாம் ஊசியினல்
தையல்போட் டான்தம்மைத்
தையல் எனக்குறித்தார்!'

'........ காதல்
விளங்கவரும் புதியவர்கள்
பயிலாத வித்தைக்குப்
பள்ளியாய் அமைந்ததனல்
படுக்கையினைப் பள்ளியெனப்
பக்குவமாய்ச்
சொல்லிவைத்தார்!'

—பேரன்ற வரிகள் பாடப்பட்டபோது, அவையினரின் கைதட்டல் ஒலி முழங்கியது.

தமிழ்-'மொழி' என்பது குறித்து
திரு. ரவி அவர்களும்,

'வீரம்' என்பது குறித்து
திரு. துறையூர் அலி
அவர்களும்,

'கற்பு' என்பது குறித்து
திரு. பெரி. சிவனடியான்
அவர்களும்,

'வாழ்வு' என்பது குறித்து
திரு. முடியரசன்
அவர்களும்,

'பெண்மை' என்பது குறித்து
திரு. சாமி. பழனியப்பன்
அவர்களும்,

'பண்பு' என்பது குறித்து
திரு. அ. சண்முகக்கனி
அவர்களும்

கவிதைகளை அரங்கேற்றினர்கள். ஒவ்வொரு கவிதையின் சிறந்த பகுதிகளையும் மக்கள் வெகுவாக ரசித்துப் பாராட்டினர்கள்.

கவியரங்கம் மதுரைக்குப் புதிது என்றாலும், அரங்கேற்றப்பட்ட கவிதைகளின் சிறப்பு, மக்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது. மதுரை எழுத்தாளர் மன்றத்தின் ஆண்டு விழாவில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தைக் கவியரங்கம் பெற்றது.

தலைவர் ஒவ்வொரு கவிஞரையும் அவையோருக்கு அறிமுகப் படுத்தியபோது, அறிமுகத்தையும் கவிதையிலேயே வெளியிட்டார்.

தலைவர் கண்ணதாசன் அவர்களின் சிறப்புரைக்குப் பின்னர், மன்றச் செயலாளர் பு. ரா. வேங்கடாசலம் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது. ★

---

**அடுத்த இதழில்**

கவியரங்கில்
**தமிழ்—மொழி**
எனும் தலைப்பில்
அரங்கேற்றப்பட்ட
திரு. 'ரவி' அவர்களின்
கவிதை
வெளிவருகிறது!

---




நாவலர் நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுகிறர்.




செயலாளர் நன்றி தெரிவிக்கிறர்.

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

கொள்கைகளிலே கோழைத்தனமோ, பொய்மையோ நிழலிடவில்லை.

'நாகரிகம், கலாச்சாரம், பண்பாடு' என்றெல்லாம் உலகம் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு திரியும் நட்புகளின் பழி தீராத பகைவனுக நீட்ஷே வாழ்ந்தான்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில்-அப்போதுதான் செழித்திருந்த விஞ்ஞான முன்னேற்றத்தில் நம்பிக்கை இழந்து போயிருந்த உலகின் ஒரு சாரினருக்கு, நீட்ஷேயின் கொள்கைகள் பெரும் ஆறுதலைத் தந்தன. எனினும் அவனது செயலையும், வாழ்வையும் எல்லோரும் தரிசிக்கவில்லை. பலர் அவனைப் பார்த்தார்கள்; சிலரால் தான் நீட்ஷேயைப் புரிந்துகொள்ள முடிந்தது!

உலகத்தின் எல்லாப் பிரச்னைகளிலும் அவனது சிந்தனையின் நிழல் விழுந்திருந்தாலும், உலகத்தோடு ஒட்டாமல் வாழ்ந்த மகாத்மாக்களும்பெருரவிர்களும்தான்,அவனை அதிகமாகக் கவர்ந்திருந்தார்கள். சமுதாயத்தையும், உலகையும் அவர்களது நடை விரிப்புகளாக நீட்ஷே சித்தரித்தான்! அதி மனிதனின் உள்ளத்திலிருந்து ஒரு ஒப்பில்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற தீராத வேட்கையிலேயே அவனது லட்சியங்கள் மலர்ந்தன.

"உலகமும், அதிலே நிகழும் வாழ்க்கையும் முடிவில்லாத பரிணமத்திலே இழைகின்றன. தத்துவ ஞானிகள், முனிபுங்கவர்கள், கலைஞர்கள் இவர்கள்தான் மனித குலத்தின் உண்மையான 'அவதார புருஷர்கள்!' அவர்கள் பண்பாட்டின் படைப்பாளர்கள் மட்டுமல்ல, அதனை வாழ்வின் அகத்திலும், புறத்திலும் சிருஷ்டித்த நிகரற்ற சாதனையாளர்கள்! அத்தகைய 'மகா மேதைகள்' தோன்ற தடையாக நிற்கும் எதையுமே அழித்தொழிக்க வேண்டும்"

நீட்ஷே கொடுத்த இந்தக் குரலின் எதிரொலியில் அதுவரை வாழ்ந்த ஏற்பாடுகள், முடிவுகள், நீதி முறைகள், அனைத்துமே ஆட்டம் கண்டன!

புதிய மதம், புதிய சட்டங்கள், புதிய கலாச்சாரம் இவைகளால் ஒரு நவீன உலகைத் தோற்றுவிக்க நீட்ஷே முயற்சித்தான். கிருத்து மதத்தின் பயங்கரமான எதிரிகளில் நீட்ஷே பிரபலமானவன். அவனது தாக்குதலிலே கிருத்துவம் அழிந்துவிட்டது என்று எண்ணியோரும் உண்டு.

நீட்ஷே ஒழுக்க விதிகளுக்கு மதிப்பளித்தானில்லை. உலக மதங்கள் எல்லாமே பொய்மையின் குப்பை மேடுகள் என்பது அவன் சித்தாந்தம்.

கலைபற்றிய நீட்ஷேயின் கருத்து இது;

மதம் எங்கே மதிப்பிழக்கிறதோ, அங்கே கலையுணர்வு செழிக்கிறது. உண்மையைத் தேடும் பணியில் தத்துவ ஞானிபோல, கலைஞன் நம்பிக்கைக்கு உரியவனல்ல. கலை, தெளிவற்ற அறிவிற்கு ஒவ்வாத திரையினுல் வாழ்க்கையை மறைக்கிறது. கலைஞன் மனித இனத்தை எப்போதுமே குழந்தையாக்கிவிடுகிருன்!

**'அதி மனிதன்'** நீட்ஷேயின் நூற்களில் உன்னதமான படைப்பு. தான் கண்ட உண்மைகளை இதிலே அவன் திரட்டித் தந்திருக்கிருன். அதி மனிதனின் பார்வையில் இன்றைய மனிதர்கள் வெறும் குரங்குகளாகவே தென்படுகிருர்கள்.

உலகைக் காதலியுங்கள். இந்த உலகிற்கு தொடர்பற்ற சேதிகளைச் சொல்வோரை நம்பாதீர்கள்! மனிதன் ஒரு லட்சியமல்ல, ஒரு பாடமாயிருப்பதே அவன் மகத்துவம். எப்படி வாழ வேண்டும் என்று தெரியாதவனை நான் நேசிக்கிறேன். அதி மனிதன் தோன்ற, சூழ்நிலையை பக்குவப்படுத்துபவனை நான் வரவேற்கிறேன். ஒளியிலே திளைக்கும் நட்சத்திரம் உள்ளத்திலே பிறக்கும்படி மனிதன் தன் எண்ணங்களோடு போராட வேண்டும்.

அதி மனிதனை லட்சிய வெறியோடு சித்தரித்த் நீட்ஷே பெண்மையை அடியோடு வெறுத்துவிடவில்லை. பெண்கள்பற்றிய அவன் கருத்து இப்போதைய முற்போக்கில் எடுபடுமா என்பதும் சிந்தனைக்குரியது.

பெண் உண்மையை உணரக் கூடியவளல்ல. அழகிலும் சிங்காரிப்பிலுமே அவள் சிந்தனை போகிறது. பெண்களின் இந்த எழிற் கலைக்காகவே ஆண்கள் அவர்களை விரும்பிப் போற்றுகிருர்கள். பெண்மையின் பலவீனமும், இனிமையும், காதல் மயக்கும் ஆண்களை எளிதில் அடிமை கொள்கின்றன.

அவனது இந்தக் கண்ணேட்டத்திலே ஆண் பெண் சமத்துவம் வெறும் கேலிக் கூத்தாகவே படுகிறது.

மென்மையோ, குழைவோ, நளினமோ இல்லாமல் தனது எண்ணங்களை அடித்துச் சொன்னவன் நீட்ஷே. ஜனநாயக சித்தாந்தங்களுக்கும், முற்போக்கு இயக்கங்களுக்கும் நீட்ஷேபோன்ற பெரும் பகைவன் வேறு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அறிஞர்கள் பலர் அவனது கொள்கைகளை அலசி, ஆராய்ந்து விமர்சனம் செய்திருக்கிருர்கள். மாக்ஸிய தத்துவங்களில் காலத்தின் பற்ருக்குறை மலிந்திருப்பதைப் போல, நீட்ஷேயிடமும் சரித்திர உண்மைகள் குறைவு.

**'ஜரா துஷ்ட்ரா'** நீட்ஷேயின் பிரசித்தமான ஏடுகளில் ஒன்று. அச்சிட்ட **நாற்பது** பிரதிகளில் **ஏழு** பிரதிகளை விமர்சனத்திற்கு அனுப்பி வைத்தான்.


எழுவரில் ஒரே ஒருவரிடமிருந்து நூல் அனுப்பியதற்கு நன்றி வந்தது.

மீதியுள்ள **முப்பத்தி மூன்று** பிரதிகளை நீட்ஷே சாகும்வரை தன்னிடமே பத்திரமாக வைத்திருந்தான்.

பிறகு எழுதிய எண்ணற்ற ஏடுகள் 'ஜரா துஷ்ட்ரா'வின் விரிவுரைகளாக இருந்தும் அவை மிகுந்த போற்றுதலைப் பெற்றன.

மக்கள் குலம் நலம் பெற வேண்டும் என்ற பெரும் வேட்கையிலேயே, நீட்ஷேயின் திருவாழ்வு கழிந்தது. பிற உலக உத்தமர்களின் வரிசையிலிருந்து அவன் தனியாகப் பிரிந்து நிற்கிருன். அரசியல் சுழிப்பிலும், ஆதிக்க வெறியிலும் சிக்கி, நாசத்திலே அமிழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய உலகில் நீட்ஷே தந்து போயிருக்கும் புதுமை வேதாந்தங்கள் இன்னும் மாற்றுக் குறையாமலே ஒளிவிடுகின்றன. ★

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை.




தற்பொழுது கூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING
ஆங்கிலக் கல்வி நிலையம்
60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
ஒரே வருடத்தில்
ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்
இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து
17-10-58-ந் தேதி
வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்
21-10-58-ந் தேதி
முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்-சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (2) ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம். (3) இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

**அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும் எட்டு நயே பைசே (8 புதிய காசுகள்) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.**

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

# வெண்பாப் போட்டி

## 27. நாடித் திரியோமே நாம்.

மும்மன்னர் பின்னவர்நாம்; முந்துபுகழ் வாய்ந்தவர்நாம்;
நம்முயிர்தான் நாடுபுகழ் நற்றமிழாம்;—எம்முறையில்
ஓடிவந்தோர் நம்மரசாம்? ஓர்போதும் அன்னவரை
நாடித் திரியோமே நாம்.

—இரா. அரங்கனுதன், நயனூர்மண்டபம்.

❁

கொல்பசியை ஆற்றிடவே கூழுணவு தேடியதால்
கல்லொன்று தாக்கியது காலில்தான்—மெல்லியளே!
பாடி அலையாமல் பாங்குணவு பெற்றிட்டால்
நாடித் திரியோமே நாம்!

—அன்பின் ஒளி, தஞ்சை.

❁

அண்ணுவின் போர்ப்படையில் சேர்ந்து பணியாற்றி
கண்ணுன தென்னகத்தைக் காத்திடவே—எண்ணுமல்,
கூடிக் குலவியே நஞ்சூட்டும் மற்றவரை
நாடித் திரியோமே நாம்.

—மா. இராசேந்திரன், பழனி.

❁

இன்பத் திராவிடத்தை இன்றுநாம் கண்டிருந்தால்
துன்ப நிலைபோக்கத் தூரத்து—பன்னுட்டை
தேடிக் கடன்கேட்க செந்தமிழா! கால்கடுக்க
நாடித் திரியோமே நாம்.

—அரூர்செல்வன், அரூர்.

❁

செந்தமிழ்த் தாய்தந்த தெய்வத் திருக்குறட்கே
எந்நாட்டு நூலும் இணையாமோ—பைந்தமிழீர்
ஈடில் குறளிருக்க இந்திமொழிக் குப்பையினை
நாடித் திரியோமே நாம்.

—கு. பரிமளம், கமுதி.

❁

கோடி கொடுத்தாலும் கொள்ளோமே கூத்திந்தி
சேடி தமிழென்ருல் தியாவோம்—கூடிநலம்
பாடிப் பதவிக்குப் பல்லிளிக்கும் பாதகரை
நாடித் திரியோமே நாம்.

—சி. ம. முத்துக்கிருட்டினன், பழனி.

❁

தோளாளர், வல்ல தொழிலாளர், தென்னகத்தின்
வேளாளர்க் கேவடக்கர் மேலாளர்—தாளோமே!
வாடிக் கிடவோம்! வடக்கத்தி யாருறவை
நாடித் திரியோமே நாம்.

—வெ. மாரிமுத்தம்மாள், பழனி.

❁

தண்டமிழை விட்டுத் தமிழர் பிறமொழியைக்
கொண்டணைத்து வாழ்தல் குணமாமோ—ஒண்ணுதலாய்
கோடி கொடுத்தாலும் கோதுமிகு இந்தியினை
நாடித் திரியோமே நாம்.

—வி. கருப்பசாமி, அபிராமம்.

❁

சொல்லும் பொருளும் தொடையும் அணிநயமும்
வெல்லும் நடையும் விரவிமனக்—கல்லுருகப்
பாடிக் கலந்திடுவோம் பைந்தமிழில்; மற்றெதையும்
நாடித் திரியோமே நாம்.

—ஆ. ஆரிது, செய்யாறு.

❁

பாடிவரும் மாங்குயிலே பாரினிலே நீளதற்கும்
தேடி அலைந்ததுண்டோ செப்பிடுவாய்—கூடிமகிழ்
சோடிகளாய் வாழ்வதினுல் தொல்லுலகி லேளதற்கும்
நாடித் திரியோமே நாம்.

—பழனிராதா, கும்பகோணம்.

❁

தன்மான மின்றித் தமக்கென்ருேர் கொள்கையின்றிக்
கன்னுபின் னுவென்றே கத்துகின்ற—உன்மத்தர்
கூடிப் பிதற்றுகின்ற கூட்டங் களை,மறந்தும்
நாடித் திரியோமே நாம்.

—பூ. ச. கந்தசாமி, தாம்பரம்.

தோய்கின்ற வாழ்வுக்குத் தோட்டிபோல் சிங்களத்தை
ஈயென்றே சொல்லி இரக்கின்ருேம்—ஆயிழையே!
நாடும் அரசும் நமதென்றே ஆகிவிட்டால்
நாடித் திரியோமே நாம்.

—சி. வானம்பாடி, முசிறி.

❁

பட்டம் பதவிபெறப் பல்லிளித்துப் பட்டியென
இட்டம்போல் சுற்றும் இழிகுணத்தார்—வட்ட மிட்டு
கோடிப்பொன் கொட்டிமிகக் கூவிடினும் அன்னவரை
நாடித் திரியோமே நாம்.

—வீரண்ணன், துறையூர்.

❁

தாய்நாடு மீட்பதற்கும் தண்டமிழைக் காப்பதற்கும்
ஓய்வின்றி நாளும் உழைப்பதற்கும்—சேயிழையே!
கூடி வடவருடன் கொஞ்சிடுவோர் ஆட்சியினை
நாடித் திரியோமே நாம்

—உதயசூரியன், அழகாபுரம்.

❁

தித்திக்கும் தென்பாண்டித் தீந்தமிழ்; மண்ணுலகில்
எத்திக்கும் வெல்குமே எக்காலும்—நித்திலமே!
கூடிப் படிப்போம் குறளதனை, இந்தியதை
நாடித் திரியோமே நாம்.

—க. முத்துச்செல்வம், சோனைப்பிரியாங்கோட்டை.

❁

செம்மைத் தமிழ்காக்கச் சிங்களத்தில் தாக்குண்டு
வெம்பி உயிர்துடித்து வெய்துற்ற—நம்தமிழர்
ஓடி யலைந்தும் உளம்துடிக்காப் பண்பினரை
நாடித் திரியோமே நாம்.

—சி. பி. சாமி, திருப்பத்தூர் (வ. ஆ.)

❁

எம்மொழியைக் கற்ருலும் எங்கே யிருந்தாலும்
நம்மொழியாம் செந்தமிழை நாம்மறவோம்—பைம்பொன்னைத்
தேடிக் கலைவளர்த்துத் தென்னகத்தைப் போற்ருரை
நாடித் திரியோமே நாம்.

—வெ. சிங்காரம், ஆசிரியர்.

❁

முப்பால் உணராரை முத்தமிழைப் பேணுரை
எப்போதும் ஏழைக்கே ஈயாரை—இப்புவியில்
ஈடில்லா நம்வாழ்வில் ஏற்றத்தைத் தாராரை
நாடித் திரியோமே நாம்.

—புவிமுதல்வன், சுண்ணும்புக்குளம்.

❁

நாட்டின் தளைநீக்கி நல்குரவைத் தானொழித்து
வீட்டின் நலம்பெருக்க வாரீரோ!—நாட்டமுடன்
ஓடிப் பணிசெய் துவப்பதன்றி வேறென்றும்
நாடித் திரியோமே நாம்.

—நுன்னு. நடராசன், கோவை.

❁

தக்கதோர் ஆட்சியினை தாம்நடத்த வக்கின்றி
மிக்கவே பேசும் மிலேச்சரினம்—மக்கிவிடப்
பாடித் திரிந்துபின் பல்லிளிக்கும் காங்கிரசை
நாடித் திரியோமே நாம்.

—பண்ணரசன், அங்குசெட்டிபாளையம்.

❁

சேவகர்பல் சூழ்ந்துள்ள செல்வந்தர் மாளிகையுட்
போவதனுற் பொல்லாங்கே; ஆனதனுல்,—தாவரியே!
வாடிமிக நம்வயிறு துன்பமதைக் கண்டாலும்
நாடித் திரியோமே நாம்.

—ஆதிராஜன், காஞ்சிபுரம்.

❁

பட்டம், பதவி, பனித்துளியே! பண்பிலார்க்கு
மட்டுமடா, மாளிகை வாசமெலாம்—விட்டிலென
ஓடி அழியும் சுகத்தை உளத்தாலும்
நாடித் திரியோமே நாம்.

—மா. வழித்துணைவன், பெங்களூர்-2.

❁

பத்தினிப் பெண்ணும் பழத்தட்டும் பஞ்சணைமேல்
தித்திக்கும் தேனும் சுவையமுதும்—முத்திதரும்
முப்பாலும் முன்னுண்டால் வேறென்றும் இப்பாரில்
நாடித் திரியோமே நாம்.

—சி. ச. சண்முகம், சிங்காநல்லூர்.

❁

வையத்துள் வாழும் வகையுரைத்த வள்ளுவனை
தெய்வ மெனநன்கு தேர்ந்திட்டோம்—ஐயமிலை
கோடிக் கணக்கினிலே கூறுகின்ற தெய்வமதை
நாடித் திரியோமே நாம்.

—கோ. புகழேந்தி, புதுவை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. [illegible]லம், ஏ. எல். எஸ். அ[illegible]ம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு

178288